
குங்குமச்
சிமிழ்
15-4-2010
விலை ரூ 4
கண்ணிலே அன்பிருந்தால்...
லட்சுமி பிரபா

முழு நாவல்

# கண்ணிலே



# அன்பிருந்தால்...

கிணற்றிலிருந்த நீரை சிமெண்ட் தொட்டிக்குள் பாலாய் பீய்ச்சிக் கொண்டிருந்தது மோட்டார். தொட்டியின் விளிம்பில் அமர்ந்திருந்தாள் வானதி.

தண்ணீரின் சலசலப்பு, தென்னங்கீற்றின் அசைவு, பறவைகளின் கூவல், மேனியைத் தொட்டு உரிமையாய் வருடும் தென்றல்... அத்தனையையும் மீறி அவளது முகம் இறுகியே கிடந்தது.

கவலையும் குழப்பமும் மனதை ஆட்டிப் படைக்கும் போதெல்லாம் வானதி இங்கு வந்து விடுவாள்.

விழிகளை மூடி சற்று நேரம் அமர்ந்திருந்தால்... மெல்ல மெல்ல மனம் இறுக்கம் இளகி, இறகு போல் இலேசாகும்.

ஆனால் இன்று ஏனோ... மனதில் கவலையும், பயமும் மாறி

லட்சுமி பிரபா

## கவிதை

புருவ வில்லை
வளைத்து
பார்வைக் கணையைத்
தொடுத்து
இந்த...
ராமனை வீழ்த்தும்
நவீன சீதையாக
நீ...

– செல்வராஜா, சேலம்

மாறிப் பந்தாட அவளுக்கு தொண்டையை இறுக்கியது.

'தம்பி திவாகர் இங்கு வருவதாய் சொல்லியிருந்தானே? ஏன் இன்னமும் வரவில்லை...?' தவிப்பாய் திரும்பி, பார்வையால் பாதையை அடிக்கடி துழாவிக் கொண்டிருந்தாள்.

மனம்விட்டுப்பேசுவதற்குக் கூட அவர்களுக்கு அங்கு சுதந்திரம் இல்லை.

அழுவதற்குக் கூட உரிமையில்லை.

மாமா மகாலிங்கம் உயிருடன் இருக்கும்போதே அவர்களுக்கு இந்த கதியாய் உள்ளதே?

நாளுக்குநாள் மாமாவின் உடல்நிலை மோசமாகிக் கொண்டிருக்கிறதே? திடீரென்று அவருக்கு ஏதாவது ஆகிவிட்டால்...?

மாமாவின் மனைவி குணவதி அவர்களை என்ன செய்வாளோ? அந்தக் கடவுளுக்குத் தான் வெளிச்சம்!

குணவதி என்ற பெயருக்கும் அவளுக்கும் கொஞ்சம்கூட சம்பந்தம் இருந்ததில்லை.

சூது, வாது, சூழ்ச்சி, தந்திரம், வஞ்சம் ஆகிய கெட்ட குணங்களின் ஒட்டு மொத்த உருவமாய் நடமாடியவள் தான் குணவதி.

மாமா மறைந்துவிட்டால்...? அதற்குப் பின் ஒரு நிமிடம் கூட அந்த வீட்டில் தங்க முடியுமா?

இதுநாள் வரை மாமாவை மலை போல் நம்பி வாழ்ந்துவிட்டார்கள்.

மாமாவைத் தவிர அவர்களுக்கு சொல்லிக் கொள்ளும்படியாக நெருங்கிய உறவினர்கள் யாருமில்லை.

அப்படியே இருந்தாலும் இவர்களது நிலைமையைப் பார்த்து அனுதாபப் படுவார்களே தவிர... அடைக்கலம் தர முன்வர மாட்டார்கள்.

மாமா மகாலிங்கத்திற்கு காசநோய்! கடந்த சில மாதங்களாக, மருந்து மாத்திரைகள், டாக்டர்கள் தரும் சிகிச்சை என்று எதற்கும் அடங்காமல் காய்ச்சல் அனலாய் கொதித்துக்

கொண்டிருந்தது.

இந்தக் கடுமையான காய்ச்சல் வருவதற்கு முன்பு, "வானதி! நீ வாழ வேண்டிய பொண்ணும்மா... டி.பி. ஒரு தொற்று வியாதிம்மா... எனக்குப் பணிவிடை செய்யணும்னு சதா என்கிட்டயே இருக்கியே?

திவாகர் பயலும் நைட் இங்கதானே என்கூட இந்த ரூம்லே படுத்துக்கிறான். வயசுப் புள்ளைங்களுக்கு வியாதி பரவிடுமேன்னு... எனக்கு ரொம்பவே உறுத்தலா இருக்கும்மா...

நான் ஒரு காய்ஞ்ச சருகு... ஆனா நீங்க இளங்குருத்துங்க. திவாகர் பயல் பிறந்த உடனேயே உங்கம்மா பத்மாவதி கண்ணை மூடிட்டா... உங்கப்பா திருப்பதி ரொம்ப உத்தமரும்மா... ஒரு ஆயாவை வேலைக்கு அமர்த்தி, உங்களைக் கஷ்டப்பட்டு வளர்த்துட்டாரும்மா...

தாயுமானவரா இருந்து குறை தெரியாம வளர்த்த மனுஷருக்கு... எட்டு வருஷங்களுக்கு முன்னால ஹார்ட் அட்டாக் வந்து சட்டுன்னு காலமாவாருன்னு... நான் கனவுல கூட நெனைக்கலை.

உங்கம்மாவோட நகைங்க இருபது பவுன், உங்கப்பாவுக்கு கிடைச்ச ஓர்க் காம்பன்சேஷன், இன்ஷீரன்ஸ் பணம் என்றெல்லாம் சேர்த்து மூணு லட்சம் பணம் வந்ததால தான் குணவதி வாயை மூடிக்கிட்டிருந்தா... இல்லேன்னா, உங்களை நான் அழைச்சுகிட்டு வந்ததுக்கு தாம்தூம்னு குதிச்சிருப்பா...

ஒரே தாய் மாமன் நான்! உங்களை வளர்த்து ஆளாக்க வேண்டியது என் கடமையில்லையா? எனக்கும் குழந்தைங்க கிடையாது. பெத்த புள்ளைங்களுக்கும் மேலா உங்க மேல நான் பாசத்தை வச்சுட்டேன்.

நான் வீட்டுலே இல்லாதப்போ... உன்னையும் திவாகரையும் குணவதி கடுமையா பேசி சக்கையாப் பிழிஞ்சு வேலை வாங்கறதை என்னால தாங்க முடியலை...

தட்டிக்கேட்டா அடங்கிப் போறவள் கிடையாதே? கத்தி சண்டை போட்டு ஊரைக் கூட்டற ரகம் அவ... அதனால வேற வழியில்லாம மௌனமா சகிச்சுக்கிட்டுப் போக வேண்டிய நிலைமை!

என்னோட கையாலாகாத தனத்தால நீங்க கஷ்டப்படறது போறாதா? வியாதி வேற வந்துட்டா என்ன செய்றது? நீங்க பணிவிடை செய்யும்போது எனக்கு மனசாட்சி அறுக்குது வானதி! நான் சொல்றதைக் கேளேன்" என்று அவர் பரிதாபமாய் ஏறிட்டார்.

"நீங்க இந்த மாதிரி பேசும்போதும்தான்... எங்களுக்கு ரொம்ப மனவேதனையா இருக்கு மாமா! எங்கப்பா ஒரு தாயுமானவரா இருந்து எங்களை வளர்த்து ஆளாக்கினாரு தான்.. எங்க துரதிர்ஷ்டம்! அவரும் திடீர்னு போய்ச் சேர்ந்துட்டாரு.

ஆனா எங்களைப் பொறுத்தவரை நீங்களும் தாயுமானவர்தான் மாமா! பெத்தவங்களை இழந்துட்ட துக்கம் தெரியாம பாசத்தைக் கொட்டி நீங்க எங்களை வளர்த்திருக்கீங்க... மாமி சுபாவம் எங்களுக்குப் பழகிப்போச்சு. திவாகரும் ஸ்கூலை விட்டு வந்ததும் மெயின்ரோட்டுல இருக்கிற மெக்கானிக் கடைக்குப் போயிடறான்.

அவனும் சைடுலே ஒரு தொழிலைக் கத்துக்கிட்டு வர்றானே? தொழில்லே அவனுக்கு இருக்கிற சிரத்தையைப் பார்த்தா... இன்னும் சில வருஷங்கள்லே ஒரு மெக்கானிக் ஷாப்பை தனியா நடத்தற அளவுக்கு அமோகமா வந்துடுவான்னு நீங்களே அடிக்கடி பாராட்டறீங்களே மாமா!

பக்கத்துல குற்றாலம் காலேஜுல சேர்ந்து மூணு வருஷம் டிகிரி முடிச்சுட்டேன். இதோ ரிசல்ட்டுக்காகக் காத்திருக்கேன். தினமும் காலேஜிலிருந்து வரும்போது தென்காசி பஸ் ஸ்டாண்டுக்குப் பக்கத்தில இருக்கிற கம்ப்யூட்டர் கோர்ஸுலே சேர்ந்து படிச்சு... மூணு கோர்ஸ் முடிச்சிருக்கேன்.

ரிசல்ட் வந்தவுடனே வேலைக்குப் போகலாம்னு இருக்கேன் மாமா! அடிஷனல் குவாலிஃபிகேஷன் வேற இருக்குல்ல... வேலை சட்டுனு கிடைச்சுடும்னு நம்பிக்கை இருக்கு.

இதெல்லாம் யாரால மாமா? பெத்த புள்ளைங்களுக்கும் மேலா எங்களை வளர்த்து ஆளாக்கினவரு நீங்க... உங்களுக்குப் பணிவிடை செய்யறதுக்கு நாங்க குடுத்து வச்சிருக்கணுமே?

இனிமே இந்த மாதிரி பேசாதீங்க மாமா! மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு..." என்று வானதி பவ்யமாய் பேசுவதைக் கேட்டு விட்டு நெகிழ்ந்து தான் போய்விட்டார் மகாலிங்கம்.

அதற்குப் பின் காய்ச்சல் தீவிரமடைந்து கண்களைக் கூடத் திறக்க முடியாத அளவுக்கு... அவருக்கு நோய் முற்றிவிட்டிருந்தது.

ஃபேமிலி டாக்டர் இன்று காலை வந்து பார்த்து ஒரு இன்ஜெக்ஷன் போட்டுவிட்டு... வானதியைத் தனியாக அழைத்தார்.

"மகாலிங்கம் குடுத்து வச்சவரும்மா... பெத்த பசங்களுக்கும் மேலா

நீங்க நல்லபடியா கவனிச்சுட்டிருக்கீங்க... அஸ் எ டாக்டர்... நா வெளிப்படையா ஒரு விஷயத்தை சொல்லித்தான் ஆகணும்.

இந்த டி.பி. வியாதிக்காரங்களுக்கு தொடர்ந்து விடாம மாசக்கணக்குல காய்ச்சல் அடிச்சா... அவங்க இறுதிக் கட்டத்துக்கு வந்துட்டாங்கன்னு நாம்ப புரிஞ்சுக்கணும்..."

உள்ளதை உடைத்துப் பேசிவிட்ட திருப்தியில் வெளியேறி விட்டார் டாக்டர்.

'இந்த வாட்டியும் மாமா தேறி வந்துடுவாரு' என்கிற நூலிழை நம்பிக்கையும் ஊசலாடியது.

குபுக் என்று பொங்கிய கண்ணீரை... கண்களைச் சிமிட்டி உள்ளிழுத்துக் கொண்டாள்.

கம்பளிப் போர்வையை உதறி மாமாவின் கழுத்துவரை போர்த்தி விட்டு.. ஊற வைத்த துணிகளைத் துவைத்து கொடியில் உலர்த்தினாள்.

மாமி குணவதி பக்கத்து வீட்டுக்காரப் பெண்மணியுடன் வம்பளந்து கொண்டிருந்தாள்.

பின் பக்கத்தில் திட்டி வாசல் கதவைத் திறந்து... எதிரே தெரிந்த வரப்பின் மீது நடந்து மூன்று நிமிடங்களில் தென்னந்தோப்பை அடைந்து... வழக்கம் போல் கிணற்றடியை சமீபித்தாள். தொட்டியின் விளிம்பில் அமர்ந்து மௌனமாகக் கண்ணீர் உகுத்தாள்.

அவள் வீட்டில் இல்லாவிட்டால்... தம்பி திவாகர் நேராக இங்குதான் வருவான்.

'மாமாவுக்கு மருந்து வாங்கப் போனவனை... வெகு நேரமாகக் காணவில்லையே?' அவ்வப்போது கவலையுடன் திரும்பிப் பார்த்தாள்.

**டிப்ஸ்**

**கூடாது... சேராது**

இரும்புச் சத்துக்காக டானிக் சாப்பிடுபவர்கள் முட்டை சாப்பிடக்கூடாது. அப்படிச் சாப்பிட்டால் இரும்புச் சத்து அவ்வளவாக உடம்பில் சேராது.

***

**பெண்கள் அவசரக்காரிகளா?**

திருமணம் செய்து கொள்ள அவசரப்படுபவர்கள் பெண்கள்தான் என்று ஒரு ஆராய்ச்சிப் புள்ளிவிவரம் கூறுகிறது.

- ஆரணி தமிழ்ச்செல்வம்

**தென் மேற்கு ஜப்பானில் புத்தர் கோயில் ஒன்றில் தலைமை குருவோடு அவரது வளர்ப்பு நாயும் பிரார்த்தனை செய்கின்ற காட்சி அங்கு வருபவர்களை வியப்பிலாழ்த்துகிறதாம்.**

- க.ரவீந்திரன்



சற்று நேரத்தில் ஓட்டமும் நடையுமாக மூச்சிறைக்க வந்த திவாகர் கலங்கிய கண்களுடன் அவளை ஏறிட்டான்.

“அ... அக்கா! எனக்கு பயமா இருக்கு” என்றான்.

“டாக்டர் சொன்னதை நினைச்சா... எனக்கும் ரொம்ப திகிலா தான் இருக்கு திவா! மாமா போயிட்டா... நாம் அனாதைங்க தான்..”

“ஐயோ அக்கா! இதைவிட பெரிய இக்கட்டுலே நாம்ப மாட்டிக்கப் போறோம். வீட்டுல சதி நடக்குது தெரியுமா அக்கா?

மருந்து வாங்கி வந்து மாமாவோட கட்டிலுக்குப் பக்கத்துல இருக்கிற மருந்து அலமாரியைத் திறந்து அதை வச்சேன்.

திடீர்னு மாமா கண் முழிச்சு என்னைப் பார்த்தாரு... கரகரன்னு கண்ணீர் வழிஞ்சது.

‘திவா! உங்க அக்கா வானதிக்கு ஆபத்து காத்திருக்குப்பா... நான் செல்லமா வளர்த்த கண்மணி வானதிக்கு பெரிய ஆபத்து வரப்போகுது. இனிமே அவ இந்த வீட்டுலே இருந்தா... மோசம் போயிடுவா...

ஜாக்கிரதை! உங்க அக்காவைக் காப்பாத்த வேண்டியது உன் கடமை திவா...' அப்படின்னு லொக் லொக்னு இருமிக்கிட்டே கஷ்டப்பட்டுப் பேசினாருக்கா"

தொட்டியின் விளிம்பில் அமர்ந்திருந்த வானதி மெல்ல இறங்கினாள்.

பயத்தில் அவளது பூமேனி உதறலெடுக்க ஆரம்பித்தது.

## 2

பெரிய சட்டத்துக்குள் அடங்கி, முகத்தில் சாந்தம் தவழ, இதழோரம் சிறு புன்னகையுடன் நேர்ப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள் அனுராதா.

கண்ணீர் மல்க கனத்த இதயத்துடன் மனைவியின் படத்தையே உற்றுப் பார்த்தான் சந்துரு.

"அனு! இப்படி அநியாயமா எங்களைத் தவிக்க விட்டுட்டுப் போயிட்டியேம்மா...

காய்ச்சல், தலைவலின்னு ஒருநாள்கூட நீ சுணங்கிப் படுத்ததே இல்லையேடா...

இப்படி உன்னை ஒட்டுமொத்தமா வாரிக் கொடுப்பேன்னு... நான் கற்பனை பண்ணிக்கூட பார்க்கலையே அனு!

நம்ம குழந்தை பூஜாவை... எப்படி எப்படியெல்லாமோ வளர்க்கணும்னு சொல்லியே... இப்படி அம்மா இல்லாத அனாதையா அவ பாசத்துக்கு ஏங்கித் தவிக்கும்படி பண்ணிட்டியே...?

அவ பத்து மாசக் குழந்தையா இருக்கும்போது... நீ அகாலமா மரணமடைஞ்சுட்டே.... பூஜாவுக்கு இப்போ மூணு வயசாகப் போகுதுடா...

குழந்தை பூஜா ப்ரீ- கேஜிக்கு போக ஆரம்பிச்சுட்டா... வயசு ஆக ஆக... விவரம் நல்லா தெரிய ஆரம்பிச்சதும்... தாயன்புக்கு ஏங்கி என் உயிரை வாங்கத் தொடங்கிட்டா...

நான் உன்னைத் தனியா அனுப்பிச்சது தப்பாப் போச்சே? கூடவே நாங்களும் வந்திருந்தா... குடும்பத்தோட மொத்தமா செத்துத் தொலைஞ்சிருக்கலாமே?

அனு! மை டியர் டார்லிங்! இப்படி என்னை அணுஅணுவா செத்து மடியும்படி பிரிஞ்சு போயிட்டியேடா...

'அத்தான்... அத்தான்'னு நீ கூப்பிடறப்போ அப்படியே என் மனசு உருகிப் போயிடுமே?

அனு! அம்மாவுக்கு வயசாயிடுச்சு பாவம்! நம்ம குழந்தை பூஜாவை வச்சுக்கிட்டு அவங்களால சமாளிக்க முடியலை...

எத்தனை வேலைக்காரங்களைப் போட்டும் என்ன பிரயோஜனம்? அவளை நல்ல முறையில வளர்த்து ஆளாக்கிறதுக்கு நீ இல்லையேடா?

'அத்தான்! உங்களைப் பார்க்கவே எனக்குப் பெருமையா இருக்கு. பிஸினஸ்லே உத்வேகமா சிரத்தையா உழைச்சு முன்னுக்கு வந்துட்டிருக்கீங்க...

இப்பவே நீங்க சிகரங்களைத் தொட்டாச்சுனு தான் சொல்லணும். தொழில்லே நீங்க காட்டற அக்கறை, ஈடுபாடு, ஆர்வம்... இதெல்லாம் தான் உங்களை இவ்ளோ உசரத்துல தூக்கி விட்டிருக்கு.

ஊர்லே இருந்து அப்பா ஃபோன் பண்ணினாரு... நம்ம மாப்பிள்ளை சாதனை மனிதர்... இன்னும் போகப் போகப் பாரு அனு! எங்கேயோ போகப் போறாரு...

இப்படிப்பட்ட இளைஞர் உனக்கு கணவரா கிடைக்க... நீ ரொம்ப குடுத்து வச்சிருக்கணும் அனு!

உன் மாமியார் தையல்நாயகி... எனக்கு ஒன்னுவிட்ட தங்கச்சி. அந்த உறவு முறையைக் காரணம் காட்டி தானே... நான் இந்த வரனை வளைச்சிப் பிடிச்சேன்!

மாப்பிள்ளையை ஆரம்பத்துல பார்க்கும்போதே... என் மனசுக்குள்ளே ஒரு பட்சி சொல்லிச்சு... இந்த இளைஞன் துடிப்பா இருக்கான். இவனோட சுறுசுறுப்புக்கும் வெறித்தனமான உழைப்புக்கும்... இவன் ஓகோன்னு வருவான்னு பட்டுச்சு...

அதான்... என் செல்ல மகளை அவர் கையில ஒப்படைச்சேன். என் கணிப்பு வீணாகலை... பார்த்தியா? நீ குடுத்து வச்சவள் அனு!' அப்படின்னு எங்கப்பா சொல்றாரு...

பதிலுக்கு நான் கொடுத்து தான் வச்சிருக்கேன் அப்பா'ன்னு நான் சொன்னேன்'னு... நீ சொல்வியே அனு!

அப்போ... நான் என்ன பதில் சொன்னேன்னு ஞாபகமிருக்கா டார்லிங்?

'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்'னு பெரியவங்க சொல்வாங்க... எனக்கு அந்த வரத்தை இறைவன் கொடுத்திருக்காருடா...

நாங்க சாதாரண நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவங்க... இந்த முன்னேற்றம் சமீபகாலமாகத் தானே வந்தது?

ஆனா நீ... பணக்கார வீட்டுல பிறந்தவ... சபேசன் மாமாவோட ஒரே பொண்ணு நீ... தென்காசியில சபேசன் மாமா ரொம்ப முக்கியமான புள்ளியாச்சே?

அவரு நினைச்சிருந்தா... தன் அந்தஸ்துக்கு தகுந்த மாதிரி பரம்பரை பணக்காரக் குடும்பத்துல உன்னைக் குடுத்திருக்கலாம்.

பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்த பொண்ணுங்களுக்கு கர்வம், திமிர் ஆணவம் எல்லாம் இருக்குமே?ன்னு... ஆரம்பத்துல எங்க குடும்பத்துல கொஞ்சம் பயந்தோம்.

அந்த பயம்... நீ இந்த வீட்டு மருமகளா அடியெடுத்து வச்சதுமே அடியோட மறைஞ்சு போயிடுச்சு... நம்ம குழந்தை பூஜாவை என்னால வரவர சமாளிக்க முடியலையே அனு... உன் ஃபோட்டோவைக்கூட அவ கண்ணுல காட்டாம மறைச்சு

## கவிதை

என் மீது
அடிக்கடி
கோபப் படு
அப்போதுதான்
உனது
சிவக்கும்
கிளிமூக்கை
நான்
ரசிக்க முடியும்.
- செல்வராஜா, சேலம்

வச்சிருக்கேன்.

இதோ... நம்ம பெட்ரூம்ல இந்த ஃபோட்டோவை மாட்டி வச்சு நான் மட்டும் பைத்தியக்காரன் மாதிரி... அப்பப்போ மனசு விட்டு உன்கிட்ட மானசீகமா பேசிட்டிருக்கேன்.

மாடியில இருக்கிற இந்த அறைக்கதவை... சதா சாத்திதான் வச்சிருக்கேன்.

உன் ஃபோட்டோவை அவ பார்த்துட்டா... கண்டிப்பா அவ ரொம்ப பிடிவாதம் பண்ண ஆரம்பிச்சிடுவா அனு!

'நம்ம அம்மா இவ்ளோ அழகானவங்களா? மத்த அம்மாக்கள் மாதிரி இவங்க நம்மைத் தூக்கி கொஞ்சணும்... சாப்பாடு ஊட்டி விடணும்...

டிரஸ் பண்ணி விடணும்... இவங்க விரலைப் பிடிச்சுக்கிட்டு நான் ஸ்கூலுக்குப் போகணும்.

மத்த ஃபிரண்ட்ஸ்கிட்டே பெருமையா அம்மாவை நான் காட்டணும். அம்மாவோட கழுத்தை இறுக்கமா கட்டிப் பிடிச்சுக்கிட்டு அவங்க இடுப்புல காலைத் தூக்கிப் போட்டுக்கிட்டு தூங்கணும். இந்த அம்மா உடனே வந்தாகணும்'னு அழுது ரகளை பண்ணி என்னை ஒரு வழி பண்ணிடுவாள்னு... பயமா இருக்கு அனு!

அதுக்குத்தான் ஃபோட்டோவை மறைச்சே வச்சிருக்கேன்.

வீட்டுக்கு வந்தாலே.. எந்தப் பக்கம் திரும்பினாலும் அழகு தேவதையா சிரிச்ச முகத்தோட நீ நிக்கிற மாதிரியே இருக்கு... பிரிவுத் துயர்லே மனசுல கனம் அதிகமாகி, விரக்திதான் மேலோங்கிப் போகுது. அதனாலே...

காலையில கிளம்பிப் போனா ரொம்ப நேரம் கழிச்சுத்தான் வீடு வந்து சேர்றேன்... சதா ஆபீஸ்லே உட்கார்ந்து பிஸினஸ்லே என் கவனத்தைத் திசை திருப்பி... என் காலத்தை ஓட்டறேன்.

வீட்டுக்கு வரவே பிடிக்கலை... நம்ம குழந்தைக்காகத் தான் வேற

பாடகி கிறிஸ்டியனா அருவிரா ஒரு படத்திற்காக 'விக்' அணிந்திருந்தார் விக்கோடு வீட்டிற்கு வந்த தாயை அவரது இரண்டு வயது மகனால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லையாம். 'விக்' இல்லாமல் பார்த்தால். சில நடிகைகளை ரசிகர்களுக்கு அடையாளம் தெரியாதே!

- க.ரவீந்திரன்



வழியில்லாம நான் இங்கே வர்றேன்...

நம்ம பூஜா குட்டிக்காக நடைப்பிணமா நடமாடிக்கிட்டிருக்கேன்.

ஒரு தாயோட அன்பும் அரவணைப்பும் இல்லாம... பூஜாவோட எதிர்காலம் இருண்டு போயிடுமோன்னு பயமா இருக்கு.

நானும் ஒரு நடைப்பிணமாயிட்டேன். பூஜாவோட எதிர்காலமும் கேள்விக்குறியா இருக்கு...

கடவுள் ஒரு ஜீவனை மட்டும் தான் பறிச்சாரு... ஆனா அதனால எத்தனை பேர் பாதிக்கப்பட்டிருக்காங்க?

சபேசன் மாமா... ரொம்ப பாவம்! ஒரே பொண்ணைப் பறிகொடுத்த அதிர்ச்சியில... மனிதர் ரொம்பவே உருக்குலைஞ்சு போயிட்டாரு.

சரஸ்வதி அத்தை, பொண்ணை இழந்த சோகத்துல அடிக்கடி படுத்த படுக்கையா ஆயிடறாங்க...

என்னையும் நம்ம குழந்தையோட நிலைமையையும் பார்த்துட்டு சதா எங்கம்மா கண்ணீர் உகுத்துட்டே இருக்காங்க...

இந்த வீடே லட்சுமிகரம் இழந்து இருண்டுபோச்சே அனு! உன்னைப் பிரிஞ்சதால... இப்படி எத்தனை எத்தனை இழப்புக்கள் டார்லிங்?

நான் மனதால்கூட யாருக்கும் எந்தக் கெடுதலும் நெனச்சதில்லையே?

கடவுள் எதுக்காக எனக்கு இப்படியொரு தண்டனையைக் குடுத்தாரு? அனு...அனு... என்னால் தாங்க முடியலையே டார்லிங்? இப்படி அணு அணுவா சித்ரவதை படறதைவிட... நானும் உன் கிட்டேயே வந்து சேர்ந்துடட்டுமா அனு?"

சந்துருவின் நினைவலைகள் பின்னோக்கிச் சுழன்றன.

## 3

"அத்தான்! உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லணும்"

கணினி திரையில் பார்வையைப் பதித்திருந்த சந்துரு... திரும்பிக்கூட பார்க்காமல் மும்முரமாய் மூழ்கிப்போயிருந்த விதம்... அனுராதாவுக்கு சற்று எரிச்சலைக் கிளப்பியது.

"அத்தான்... அத்...தான்" குரலைச் சற்று உயர்த்தி அவனது புஜத்தில் மிருதுவாகத் தட்டினாள்.

"ஆங்... சொல்லு அனு"

"என்ன அத்தான் இது?

"சதா... பிஸினஸ், பிஸினஸ்னு ஓயாம உழைக்கிறீங்க... வீட்டுக்கு வந்தும் கூட அதே நினைப்புதானா? நான் கூப்பிட்டது கூட உங்க காதுல விழலை?...

இதையெல்லாம் மூட்டை கட்டி வச்சுட்டு எங்ககூட ஜாலியா ஃப்ரீயா இருக்க மாட்டீங்களா அத்தான்? ஃபேமிலிக்காகவும் கொஞ்சம் டயத்தை ஒதுக்கக்கூடாதா?" செல்லமாய் சிணுங்கினாள்.

"என்னடா அனு? சலிச்சுக்கிறே? நான் யாருக்காக இப்படியெல்லாம் பண்றேன்? எல்லாம் உங்களுக்காக... நம் குடும்பத்துக்காகத்தானே? எப்பவும் என்னைப் பாராட்டிப் பேசுவியே?

இன்னிக்கு என்ன ஆச்சு? மூட் அவுட்டா? திடீர்னு சலிப்பா கோவிச்சுக்கிட்டு பேசறியே அனு? சரி... இப்ப சொல்லு! என்ன விஷயம் அனு" ஆதுரமாய் அவளது கையைப் பிடித்துக் கொண்டான்.

"என்கூடப் படிச்ச கௌரிக்கு கல்யாணம்... ஸ்கூல்ல மட்டுமில்ல காலேஜ் முடிக்கிற வரைக்கும் நாங்க பிரிஞ்சதே இல்ல... எனக்கு ரொம்ப க்ளோஸ் ஃபிரண்டுங்க...

தென்காசியில தான் கல்யாணம் அப்பாகூட நம்ம குலதெய்வம் கோவில்லே திருவிழா நடக்கப் போகுது. ஒரு நடை வந்து சாமி கும்பிட்டுட்டுப் போறீங்களாம்மா?ன்னு கேட்டாரு.

ரெண்டு மாசத்துக்கு முன்னாடி தானேப்பா... குழந்தையோட வந்துட்டுத் திரும்பினேன்... அங்க இருந்துட்டு வந்ததும் தண்ணி மாற்றத்துல... குழந்தைக்கு ஜலதோஷம் காய்ச்சல் சளி பிடிச்சுக்கிட்டு... ரொம்ப அவஸ்தை பட்டோமே?

குழந்தை நார்மலுக்கு வரதுக்குள்ளே... போதும் போதும்னு ஆயிடுச்சே? பேத்தியைப் பார்க்கணும்னு ஆசைப்பட்டா... நீங்க ஒரு நடை இங்க வந்துட்டப் போங்கப்பா... நான் மட்டும்தான் வருவேன்.

நான் கௌரி கல்யாணத்தைப் பாத்துட்டு உடனே திரும்பிடுவேன். நீங்க திருவிழா முடிஞ்சதும் இங்க வந்துட்டுப் போங்களேன்னு நான்

சொன்னேன்.

'ஏம்மா நீ மட்டும் தனியாவா வர்றே? மாப்பிள்ளைகிட்டே சொல்லிப்பாரு... ரெண்டு பேரும் ஜோடியா வந்துபோனா நல்லா இருக்குமே?'ன்னு அப்பா என்கிட்ட சொன்னாரு...” அனுராதா சொன்னதைக் கேட்டுவிட்டு புன்முறுவலுடன் சந்துரு ஏதோ பேசுவதற்கு வாயெடுப்பதற்குள்... முந்திக் கொண்டு தனது பேச்சைத் தொடர்ந்தாள்.

“இல்லப்பா... அது சரிப்பட்டு வராது. அவர் சாப்பிடறதுக்கும் தூங்கறதுக்கும் கூட நேரம் இல்லாம ஓயாம உழைச்சுட்டிருக்காரு.

அவரை டிஸ்டர்ப் பண்ண எனக்கு மனசு வரலைப்பா... நான் மட்டும் வந்து ஃபங்கஷன்லே அட்டெண்ட் பண்ணிட்டு உடனடியா திரும்பிடறேன்.

அத்தைகூட சின்னக்குழந்தையை அவ்ளோ தூரம் தூக்கிட்டுப்போய் சிரமப்பட வேணாம். பிரயாணம் குழந்தைக்கு ஒத்துக்கலை... குழந்தையை நான்



## கவிதை

ஒரு விஷயத்தை
தேடினேன்...
கிடைத்தது
ஒன்பது விஷயங்கள்!
- பொதக்குடி 'வெற்றிமுரசு'

பார்த்துக்கிறேன். ரெண்டு நாள் நைட் தானே? நான் பத்திரமா பார்த்துக்கிறேன். போயிட்டு வாம்மா'ன்னு சொல்லிட்டாங்க"

படபடப்பாய் பேசிவிட்டு அவனை ஏறிட்டாள் அனுராதா.

"எல்லாத்தையும் நீங்களே டிஸைட் பண்ணியாச்சு போலிருக்கு? க்ளோஸ் ஃபிரண்டோட கல்யாணத்தை அவசியம் பார்க்கணும்தான்... குழந்தைய அம்மா கவனிச்சுப்பாங்க...

கவலையில்லை. ஆனா உன்னைத் தனியா அனுப்பறதுக்கு எனக்கு மனசில்லையே அனு? டூ டேஸ்ஸ்தானே? எல்லாத்தையும் ஒதுக்கி வச்சுட்டு நானும் உன்கூட வந்துடறேன்.. எனக்கு நீதானே முக்கியம் டார்லிங்?"

அவளது விழிகளை ஊன்றிப் பார்த்தபடி சிரித்தான் சந்துரு.

சட்டென்று அவளது அழகிய முகத்தில் ஏமாற்றம் படிந்தது.

"என்ன அனு திருதிருன்னு முழிக்கிறே? நான் வர்றேன்னு சொன்னா... நீ சந்தோஷப்படுவேன்னு நினைச்சேன். உன் முகமே இருண்டு போச்சே?"

அவளது கன்னத்தில் செல்லமாய் தட்டினான் சந்துரு.

"குடும்பத்துக்காக நான் டயம் ஒதுக்க மாட்டேங்கிறேன்னு... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் குறைபட்டுக்கிட்டே? சரி.. வா! சேர்ந்தே போகலாம்'னு நான் சொன்னா... ஸ்டன் ஆகி நிக்கிறே? உன்னை என்னால புரிஞ்சுக்கவே முடியலை அனு!"

"போங்க அத்தான். உங்களுக்கு லேடீஸ் சைக்காலஜியே புரியலை. குறை சொன்னது உண்மைதான். ஆனா, நிஜத்துல எனக்கு உள்ளூர உங்களைப் பத்திப் பெருமைதான். நான்தனியா போறேங்கற கவலைல உங்க வேலைகளை மூட்டைக்கட்டி வச்சுட்டு என்கூட வர்றேங்கறிங்க. எவ்வளவு பிஸியான மனிதர் நீங்க. மேலும் நான் தனியா போகலை அத்தான்! என்னோட காலேஜ்மேட்ஸ் கல்பனாவும் மேனகாவும் வர்றாங்க... எனக்கும் சேர்த்து அவங்க ட்ரெயின் டிக்கெட் புக் பண்ணிட்டாங்க... கல்பனா கிண்டியில இருக்கா... மேனகா

வெஸ்ட் மாம்பலத்துல குடியிருக்கா...

எங்க செட்டுலே கௌரிக்குத் தான் லாஸ்ட்டா கல்யாணம் ஆகப்போகுது. பிரண்ட்ஸ் எல்லாருமா அங்க மீட் பண்ணி ஜாலியா கலாய்ச்சுட்டு வரலாம்னு பிரியப்பட்டு கிளம்பறோம் அத்தான்"

"ஓஹோ... எல்லாம் ஏற்கனவே முடிவு பண்ணியாச்சா? சரிதான்! இந்த அத்தான்கூட போறதைவிட... ஃபிரண்ட்ஸ் கூடப்போனா... ஜாலியா இருக்குமேன்னு நீ ஃபீல் பண்றே அப்படித்தானே?"

வேண்டுமென்றே அவளை சீண்டிப் பார்த்தான் சந்துரு.

"ஐயோ... தப்பா எடுத்துக்காதீங்க அத்தான்! உங்க வேலை எதுவும் என்னால பாதிக்கப்படக்கூடாதுன்னு தான்... நான் அவங்க கூடப் போகலாம்னு இருக்கேன்.

ஜாலின்னு சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னேன் ரெண்டுநாள்தான்... ஆனா உங்களை குழந்தையையும் சுத்திதான் என் நினைவுகள் இருக்கும்.

பூஜாவையும் உங்களையும்விட்டு என்னால் பிரிஞ்சு இருக்க முடியுமா? சொல்லுங்க அத்தான்!

இதைத் தவிர்க்க முடியாது. அதனால தான் நான் போறேன். நான் எங்க போனாலும் என் உயிர் உங்களை விட்டுப் பிரியாது. தெரியுமா?"

"போறேன்'னு சொல்லக்கூடாது. போயிட்டு வர்றேன்னு சொல்லு அனு"

"சரி அத்தான்! போயிட்டு வர்றேன்'னு சொல்றேன். போதுமா? எனக்கு அனுமதி தந்ததுக்கு ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்"

"மண்டு! கணவன் மனைவிக்குள்ளே யாராச்சும் தேங்க்ஸ் சொல்லிப்பாங்களா?"

மனைவியின் ஆசைக்கு முட்டுக்கட்டை போடக்கூடாதுஎன்று அரை மனதோடு அவளை அனுப்பி வைத்தான் சந்துரு.

"கல்யாணம் நல்லபடியாக நடந்து முடிஞ்சது அத்தான்! பூஜா குட்டி என்னை நினைச்சு ரொம்ப அழுதாளா? இல்லேல்ல.. அப்பாடா... இதோ இன்னிக்கு நைட் ட்ரெயின்லே ஏறி வந்துடுவேன்.

கார்த்தால நான் வீட்டுலே இருப்பேன். ஸ்டேஷனுக்கு நீங்க

வரவேணாம். ஃபிரண்ட்ஸ் எல்லாரும் கால் டாக்ஸி பிடிச்சு வந்துடுவோம். என்னை இறக்கி விட்டுட்டுத் தான் அவங்க போவாங்க. சரியா? பாப்பாவை நல்லபடியா பார்த்துக்கோங்க...

என்னைப் பத்தி கவலைப்படாதீங்க அத்தான். வச்சுடட்டுமா? பை" தோழியின் திருமணம் முடிந்ததும் அனுராதா அவனுக்கு ஃபோன் செய்தாள்.

கடைசி முறையாக அவள் ஃபோனில் பேசியிருக்கிறாள் என்பதை அப்போது அவன் அறியவில்லை.

மறுநாள் விடியற்காலையில் அவன் அசந்து தூங்கும் நேரத்தில் அவனது மாமனார் சபேசனிடமிருந்து ஃபோன் வந்தது.

"மா... மாப்பிள்ளை... நாம்ப மோசம் போயிட்டோம் மாப்பிள்ளை..." என்று கேவினார்.

"எ... என்னாச்சு மாமா?"

பதற்றம் அவனது உடலெங்கும் கிளை விட்டுப் படர்ந்தது.

"நம்ம அனு வந்த ட்ரெயின் தடம்புரண்டு கவிழ்ந்திடுச்சு மாப்பிள்ளை... ஐயோ... கடவுள் என் தலையில இடியை இறக்கிட்டாரே? இப்படியாகும்னு நான் நெனக்கவே இல்லையே?"

கதறினார் சபேசன்.

"மா... மாமா! நாம்ப யாருக்கும் ஒரு கெடுதலும் செய்யலை. நம்ம அனுவுக்கு எதுவும் ஆகியிருக்காது மாமா... நம்பிக்கையோட..."

"இ... இல்ல மாப்பிள்ளை... மதுரைக்குப் பக்கத்துல ட்ரெயின் தடம் புரண்டிருச்சாம்... ரயில் பெட்டிகள் எகிறி ஒன்றின் மேல் ஒன்றா ஏறினதிலே... ஐயோ எல்லாம் போச்சு...

நியூஸை டி.வி.யில பார்த்ததும் மின்னல் வேகத்தில் எனக்கு தெரிஞ்ச இன்ஸ்பெக்டருக்கு ஃபோன் போட்டேன். ஸ்பாட்டுலே போயி பார்த்துட்டு ஃபோன் பண்ணினாரு...

நம்ம அனு இருந்த ரயில் பெட்டி உருத்தெரியாம... கடவுளே! இவ ஏன் கல்யாணத்துக்குப் புறப்பட்டு வந்தா... பச்சைக் குழந்தையை அனாதையா தவிக்க விட்டுட்டு என் மக போயிட்டாளே மாப்பிள்ளை!

என் ஒரே வாரிசு... செல்ல மகளை இப்படி வாரிக்குடுத்துட்டேனே

மாப்பிள்ளை... விபத்து நடந்த இடத்துக்குப் போயிட்டிருக்கோம்...

இதெல்லாம் கெட்ட கனவா இருக்கக்கூடாதா மாப்பிள்ளை”

“நோ... நோ” அலறி விட்டான் சந்துரு.

உள்ளங் கையில் பூப்போல அவளைத் தாங்கியவன் சந்துரு. மனைவியின் உருத்தெரியாமல் அகோரமாய் சிதைந்த சடலத்தைக் கண்டு கதறி விட்டான்.

அந்த ரயில் பெட்டியில் பயணித்தவர்கள் ஒருவர் பாக்கியில்லாமல் சிதைந்து கிடந்த காட்சி... கல் மனம் படைத்தவர்களையும் கலங்க வைப்பதாய் இருந்தது.

‘இது நிஜம் தானா? அல்லது பயங்கரமான கெட்ட கனவா? என் அனு என்னை விட்டுப் போயிட்டாளா?’

வெகு நாட்களாகியும் அந்த நிஜத்தை அவனால் ஜீரணித்துக் கொள்ளவே இயலவில்லை.

சந்துரு தனது மனைவி அனுராதாவின் மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்தான்.

அதற்கு முதல் காரணம்... அவள் அமைதியே உருவானவள். அவள் இருக்கும் இடமே தெரியாது என்பதுதான்! இறந்துபோனவளிடம் தானும் போய்ச் சேர்ந்து விடக்கூடாதா? என்று அவன் ஏங்கியதும் நிஜம்!

ஆனால்... அந்த அன்பு மனைவி அவனுக்கு மிகப்பெரிய துரோகம் இழைத்திருக்கிறாள் என்பது தெரிந்தால்... மென்மையான மனம் படைத்த சந்துரு... அதைத் தாங்கிக் கொள்வானா?

ஆண்டுகள் இரண்டாகியும் அவன் துக்கத்தில் துவண்டு கிடப்பதைக்

**டிப்ஸ்**

**ஷேவிங் டைம்**

**ஷே**விங் செய்து கொள்ள அதிகாலை நேரம் உகந்ததல்ல. காலையில் முகம் கழுவி குளித்து காபி டிபன் சாப்பிட்ட பிறகு ஷேவிங் செய்வதே சிறந்தது என்று சொல்லப்படுகிறது.

***

**மணக்கும் ஏலம்**

**ஏ**லச்செடி 40 ஆண்டுகள் மணம் பரப்பும். அதாவது 40 ஆண்டுகள் தொடர்ந்து பலன் கொடுக்குமாம்.

- ஆரணி தமிழ்ச்செல்வம்

திண்டுக்கல் மாவட்டம் அய்யாப்பட்டி கிராமத்தில் எஸ்.ஏ.சந்திர சேகரின் வெளுத்துக்கட்டு என்ற படத்தின் படப்பிடிப்பு இரண்டு மாதங்கள் நடந்தது. படப்பிடிப்பிற்காக 30 அடி உயரத்தில் அய்யனார் சிலை ஒன்றை நிறுவியிருந்தார்கள். படப்பிடிப்பு முடிந்ததும் அந்த சிலையை அகற்றாமல் கிராம மக்கள் வழிபட வசதியாக அப்படியே விட்டுவிட்டு வந்துவிட்டார்கள்.

- க.ரவீந்திரன்



கண்டு... விதி சிரித்தது.

## 4

"டேய் திவா! என்னப்பா சொல்றே? மாமா எதுக்காக அப்படிப் பேசினாரு? காரணம் ஏதும் சொல்லலையா?" வியர்க்க விறுவிறுக்க வந்து நின்ற தம்பியை, பரிதாபமாய் ஏறிட்டாள் வானதி.

கிணற்றுக்குச் சற்றுத் தள்ளி ஒற்றையாய் நின்றிருந்த வேப்பமரக் கிளையில் குடுகுடுவென்று ஓடிய அணில், நின்று நிதானித்து இவர்களை நோட்டமிட்டது. அதற்கு என்ன தோன்றியதோ? நிமிர்ந்திருந்த தன் வாலால் மூன்று முறை 'தட்... தட்' என்று கிளையில் அடித்து சத்தியம் செய்துவிட்டு... 'ட்விட்... ட்விட்' என்று கிரீச்சிட்டு எச்சரித்துவிட்டு சிறு மரப் பொந்திற்குள் ஒளிந்து கொண்டது.

"ஏதோவொரு விஷயத்தை மாமா கேள்விப்பட்டிருக்காருன்னு தோணுது. மாமி சதித் திட்டம் தீட்டறாங்கன்னு புரியுது... மேற்கொண்டு அவரு முழுசா என்கிட்ட சொல்றதுக்குள்ளே... மாமி உள்ளே

வந்துட்டாங்க... மாமா டக்குன்னு பேச்சை நிறுத்திட்டாரு. அக்கா! மாமா ரொம்பப் பாவம்... இதைப் பேசி முடிக்கும் முன்னே அவர்பட்ட பாடு இருக்கே? விடாத இருமல்... கர் கர்னு மூச்சிறைப்பு வேறே...

எனக்கொண்ணும் பிரச்சினை இல்ல... ஆனா நீ? மாமாவுக்கு ஏதாச்சும் ஆயிட்டா... நமக்கு... அதிலும் உனக்கு... இந்த வீட்டுலே எந்தப் பாதுகாப்பும் இருக்காதுன்னு தோணுது.

என்ன செய்றதுன்னு ஒண்ணும் புரியமாட்டேங்குது. ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம் அக்கா! உனக்கு எந்த ஆபத்து வந்தாலும் சரி... என் உயிரைக் கொடுத்தாவது உன்னை நான் காப்பாத்திடுவேன்.

நான் வீட்டுலே இல்லாத நேரமா பார்த்து... மாமி ஏதாச்சும் பிளான் பண்ணி உன்னை ஏதாவது செஞ்சிடுவாங்களோ?ன்னு ரொம்பவே பயமா இருக்கு அக்கா!..."

"திவா! டாக்டர்வேற கையை விரிச்சுட்டாரு... மாமா எப்ப வேணும்னாலும் கண்ணை மூடிடுவார்ங்கிற உண்மையை என்னால ஏத்துக்கவே முடியல...

ஒருவேளை மாமா... ஜுர வேகத்துல இந்த மாதிரி பினாத்துறாரோ?ன்னு தோணுது திவா!" எனக்கு ஆபத்து வருதோ இல்லையோ... மாமா போனதுக்கு அப்புறம் நாம இந்த வீட்டுல இருக்க முடியாது திவா...

மாமியோட குணத்துக்கு நம்மால ஒருநாள்கூட இங்க காலம் தள்ள முடியாதுங்கிறது மட்டும் நிஜம். அது எனக்கு நல்லாவே புரியுது. மாமா சொன்ன விஷயம்தான் ஒரு நெருடலா இருக்கு திவா..."

"மாமா முகத்துல தெரிஞ்ச பீதியைப் பார்த்தா... அவரு ஜுர வேகத்துல உளறினதா எனக்குத் தெரியலை அக்கா! அவர் சொன்னது நிஜமாத்தான் இருக்கணும்."

"சரி... நடக்கிறது நடக்கட்டும். பகவான்மேல பாரத்தைப் போட்டு நடக்க வேண்டியதுதான். வா திவா! போகலாம்... இனிமே மாமாவை விட்டு நாம்ப ஒரு கணம் கூட நகரக்கூடாது.

குணவதி மாமி என்ன செய்யப் போறாங்கங்கிறது... இன்னும் ஒரு சில நாட்கள்லே தெரிஞ்சுடும். அதைப் பத்தி நாம்ப அப்புறமா கவலைப்பட்டுக்கலாம்.

இப்போ... மாமாவை கண்ணும் கருத்துமா ஜாக்கிரதையா கவனிச்சுக்க வேண்டியது நம்ம கடமை! வா... போகலாம்..."

அவர்கள் வீட்டுக்குச் சென்ற போது... மாமாவின் அறை வாசலுக்கு எதிரே நின்றபடி குணவதி மாமியும் பக்கத்துத் தெரு பங்களா வாசியான பங்கஜமும் இரைந்த குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பங்கஜம் ஒரு திமிர் பிடித்த ராங்கிக்காரி என்பது அந்த வட்டாரத்திற்கே தெரியும்.

அவளது பங்களாவில் வேலைக்குச் செல்பவர்கள்... ஒரு மாதத்திற்கு மேல் தாக்குப் பிடிக்க மாட்டார்கள்.

வீட்டு வேலை செய்ய வந்தவர்களை சக்கையாகப் பிழிந்து ஓட ஓட விரட்டும் பங்கஜம்... வீட்டுக்கு வாழ வந்த மருமகளை சும்மா விட்டு வைப்பாளா?

மகன் வீரேந்திரனை தனது கைக்குள் போட்டுக் கொண்டு அப்பாவி மருமகளை அவள் படாதபாடு படுத்தி வைத்தாள். ஐந்தாண்டுகளுக்கு முன்...

கொடுமை தாங்க முடியாமல் ஐந்து மாத கர்ப்பிணிப் பெண் தன் மேல் நெருப்பைப் பற்ற வைத்துக் கொண்டு அகாலமாய் மாண்டு போனாள் என்பதை ஊரறியும்.

ஃபைனான்ஸ் கடை, பிராந்திக் கடைகள் என்று நடத்தி வந்த வீரேந்திரன் ஒரு நடமாடும் மிருகம்!

நேர்மையற்ற வழிகளில், லட்சக்கணக்கில் பணம் சம்பாதிக்கும் கலையைக் கற்ற மோசக்காரன்.

கன்னங் கரேலென்று சினிமாவில் வரும் அடியாளைப் போன்ற கரடுமுரடான தோற்றம் கொண்டவன். அரசியல் பிரமுகர்களுடன் அவனுக்குத் தனி செல்வாக்குண்டு. எந்தக் கேஸிலும் பிடிபடாமல் போலீஸுக்கு தண்ணி காட்டிக் கொண்டிருப்பவன்.

அவன் காரில் தூரத்தில் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தால்... குழாயடியில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருக்கும் பெண்கள், குடத்தை அப்படியே போட்டு விட்டு தலை தெறிக்க ஓடி ஒளிந்து கொள்வார்கள்.

பங்கஜமும் குணவதியும் இவர்களைக் கண்டதும் சட்டென்று பேச்சை நிறுத்தினர்.

வானதியும் திவாகரும் திகைப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்துக்

கொண்டனர்.

"அட வாம்மா வானதி! என்ன இப்படி இளைச்சுப் போயிட்டே? மாமாவுக்கு உடம்புக்கு முடியாம படுத்துட்டாரே?ன்னு அதிகமா கவலைப்படறியா?

என்ன செய்யறது? வயசானாலே கண்டவியாதிகள் வர்றதுசகஜம்தானே? காலத்துக்கும் அப்படியே இருந்துட முடியுமா?

ஆயுசு கணக்கு முடிஞ்சு போச்சுன்னா... எமன் ஏதாச்சும் நோவைக் கொடுத்துதானே எடுத்துட்டுப் போவான்? போற உசுரை நாம்ப தடுத்து நிறுத்தவா முடியும்?

விதி இவ்வளவு தான்னு மனசைத் தேத்திக்கிட்டு... ஆக வேண்டியதைப் பார்க்கணும். அதுதான் புத்திசாலித்தனம்! அதை விட்டுட்டு கவலைப்பட்டு கண்ணீர் விட்டுக்கிட்டு இருந்தா... புதுசு புதுசா வியாதிகளை நாம்பளே இழுத்து விட்டுக்க வேண்டியதுதான்.

நீ படிச்சவ... நாலும் தெரிஞ்சவ... நீதானே உங்க மாமிக்கு ஆறுதல் சொல்லணும். அவளுக்கும் குழந்தை குட்டிங்கன்னு யாரும் இல்ல.. உங்களை விட்டா அவளுக்கு வேற யாரு இருக்கா?

நீதான் இனிமே அவளுக்கு அனுசரணையா, பக்கபலமா இருக்கணும். பெத்தவங்களை இழந்து அனாதரவா வந்தவங்களை குணவதி வளர்த்து ஆளாக்கியிருக்கா...

# கவிதை

**பதவிக்காக**

பட்டுப் புடவைக்காக
பூப்பெய்ய துடிக்கும்
சிறுமிகளாய்
பதவிக்காக
தேர்தலில் நிற்கும்
அரசியல்வாதிகள்!

- போளூர் சி.ரகுபதி

அந்த நன்றியை நீயும் உன் தம்பியும் என்னிக்கும் மறந்துடப்படாது. இனிமே உங்களுக்கு சகலமும் அவதான்.

அவளுக்கு நீங்க தான்! அன்பா வளர்த்தவ அன்னைக்கு சமானம்! அவ மனசு குளிரும்படியா அனுசரிச்சு அவளுக்கு இணக்கமா நடந்துக்கோங்க...

அதுதான் உனக்கு நல்லது. சரியா வானதி!"

கர்ணகடூரமான குரலில் பங்கஜம் புத்திமதி சொன்னதைக் கேட்கவே நாராசமாய் இருந்தது.

வானதிக்கு உள்ளூர எரிச்சல் மண்டிக் கொண்டு

வந்தது. பங்கஜத்தை ஏறிட்டுப் பார்க்கவே அருவருப்பாய் இருந்தது.

'இந்த மாதிரி ஜென்மங்களுடன் தர்க்கம் செய்வது வீண்!' என்று எண்ணியவள்.... இலேசாய் தலையாட்டிவிட்டு அவர்களைத் தாண்டிக் கொண்டு அறைக்குள் புகுந்தாள்.

கழுத்து வரை கம்பளிப் போர்வையைப் போர்த்திக் கொண்டு படுத்திருந்த மாமா மகாலிங்கம் விழிகள் கலங்க... அவளை ஏறிட்டார்.

"ஓட்ஸ் கஞ்சி எடுத்துட்டு வரட்டுமா மாமா?" மெல்ல வினவினாள் வானதி.

மாமா மறுப்பாய் தலையசைத்தார்.

பாவம்! மாமா விழித்துக் கொண்டு இருக்கிறார். இந்த பங்கஜம் கர்ண கடூரமான குரலில் பேசுவதை எல்லாம் செவிமடுத்திருப்பாரே?

அவர் மனது என்ன பாடுபட்டிருக்கும்?" உள்ளூர இரக்கம் சுரந்தது.

சட்டென்று பங்கஜம் அறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

"வானதி கண்ணு! கவலைப்படாதேம்மா... இனி இந்தக் குடும்பத்துக்கு நாங்க இருக்கோம்.

திடீர்னு ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா... உடனே எங்க வீட்டுக்கு ஃபோன் போடு! ஆம்பிளைத் துணை யாருமில்லையே?ன்னு விசனப் படாதீங்க... எம்பிள்ளை வீரேந்திரன் வந்து நின்னா... சபை நிறைஞ்சிடும். புரியுதா? ஆக வேண்டியதை அவன் பார்த்துக்குவான்.

**டிப்ஸ்**

**பொன்மொழி**

**நா**ன் சேவையின் மூலமே ஆண்டவனை அடைய முடியும் என்பதை அறிந்தேன். ஆகையால் சேவையையே என்னுடைய மதம் ஆக்கிக் கொண்டேன்.

- காந்தியடிகள்.

**இடப்பக்க மூளை**

**ம**னிதனின் மூளைக்கு இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. வலக்கை பக்கம் உள்ளவருக்கு வலப் பக்க மூளையும், ,இடக்கை பழக்கம் உள்ளவருக்கு இடப்பக்க மூளையும் வேலை செய்கின்றன. அந்த இரண்டு பக்க மூளைகளில் இடப்பக்க மூளைதான் மிகவும் சுறுசுறுப்பானது என்கிறார்கள்.

- ஆரணி தமிழ்ச்செல்வம்

சகலத்தையும் அவன் எடுத்துச் செய்துடுவான்... உன் தம்பி சின்ன வயசுக்காரன்! குணவதிகிட்டே ஃபோன் நம்பர் குடுத்திருக்கேன். ராத்திரி எந்த நேரமானாலும் கூச்சப்படாம கூப்பிடு! மத்ததை எல்லாம் நாங்க பார்த்துப்போம். சரியா?"

பங்கஜம் உச்சஸ்தாயியில் பேசிவிட்டு, அவளது பதிலுக்குக் காத்திராமல் நடையைக் கட்டினாள்.

"சீச்சி! இவங்களுக்கு மனச்சாட்சியே இல்லையா? மாமா கேட்டுக்கிட்டிருக்கும் மாமா கேட்டுக்கிட்டிருக்கும் போதே எப்படி பேசிட்டுப் போறாங்க பார்த்தியா அக்கா..."

கோபம் தாளாமல் பல்லைக் கடித்த படி முணுமுணுத்தான் திவாகர்.

"இங்க வா வானதி! பங்கஜம் கிளம்பறாங்க. வாசல் வரை வந்து வழியனுப்ப வேணாமா? இவ்ளோ வசதியா வாழறவங்க... நம்மை மதிச்சு நம்ம வீட்டுப் படியேறி வந்து... உங்க மாமாவைப் பத்தி அக்கறையா விசாரிச்சாங்களே?

இந்த நல்ல மனசு யாருக்கு வரும்? மசமசன்னு நின்னுக்கிட்டே இருக்காம... வா வெளியே! அவங்க என்ன நினைப்பாங்க?"

அதற்கு மேல் ஒரு கணம் தாமதித்தாலும்... குணவதி மாமி பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டு விடியவிடிய லட்சார்ச்சனை செய்து விடுவாளே? என்ற பயத்தில்... வானதி ஓட்டமும் நடையுமாக விரைந்தாள்.

"மெல்ல வா ராஜாத்தி! ஏன் இப்படிப் பதறி ஓடி வர்றே? நான் ஒண்ணும் நெனக்க மாட்டேன் வானதி! இனிமே என்னை வேத்து மனுஷியா பார்க்க வேணாம். வீரேந்திரன் நாளைக்கு வந்து பார்ப்பான். ஒண்ணுக்குள்ளே ஒண்ணு ஆகப் போறோம். அப்புறம் என்ன? நா வரட்டுமா?"

வானதியின் தாடையைத் தொட்டுத் தடவி விட்டு விடை பெற்றாள் பங்கஜம்.

வானதிக்கு திக்கென்றிருந்தது.

## 5

**வா**னதியின் செவிகளில், பங்கஜம் பேசிவிட்டுச் சென்ற

வார்த்தைகள் திரும்பத் திரும்ப ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன.

'ஒண்ணுக்குள்ளே ஒண்ணு ஆகப்போறோம்' என்கிறாளே? அப்படியென்றால் என்ன அர்த்தம்?

இது காலம் வரை... இந்த வீட்டுக்கு வராமல் இருந்தவள் பங்கஜம்.

திடுதிப்பென்று இவ்வளவு அக்கறையாக வீடு தேடி வந்து மாமாவின் உடல்நலத்தை விசாரிக்கிறாளே?

அவசரத்துக்கு ஓடி வந்து உதவத் தயாராக இருப்பதாகவும், தனது மகன் வீரேந்திரன் சகல காரியங்களையும் எடுத்துச் செய்வான் என்று வாக்களிக்கிறாளே?

எதற்காக? இவள் திடீர் என்று இப்படி கரிசனம் காட்டுவதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டுமே?

சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

எனக்கு ஆபத்து காத்திருப்பதாக மாமா திவாகரிடம் எச்சரித்தாரே? அந்த ஆபத்து இவர்கள் மூலமாகத் தான் வரப்போகிறதா? அப்படித்தான் இருக்க வேண்டும்.

'வீரேந்திரன் நளைக்கு வந்து பார்ப்பான்' என்று பங்கஜம் கூறிவிட்டுச் செல்கிறாளே?

கடைந்தெடுத்த அயோக்கியன் வீரேந்திரன்! பொம்பளைப் பொறுக்கி வேறு...

அவன் இந்த வீட்டுக்குள் வந்து சென்றால்... அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் என்ன நினைப்பார்கள்?

குணவதி மாமி பங்கஜத்திடம் குழைந்து இழைந்து பேசுவதைப் பார்த்தால்... நல்ல விதமாகப் படவில்லையே?

என்னைப் பாழும் கிணற்றில் தள்ளிவிட மாமி தயாராகிவிட்டாள்.

இந்த விஷயம் எப்படியோ மாமாவின் செவிகளை எட்டிவிட்டது போலும்.

அதனால்தான் பதறியபடி திவாகரிடம் எச்சரிக்கை செய்து இருக்கிறார்.

மாமா தனது அந்திம காலத்தை எட்டிப் பிடித்துவிட்டார். அவரது

தீபிக்ஷா
நாக்பால் இந்திய
திரையுலகில்
பத்து துறைகளில்
ஈடுபட்டவர் என்ற
சிறப்பைப் பெற்றுள்ளார்.
'யே தூரியான்' என்ற
படத்திற்காக தயாரிப்பாளர்
இயக்குநர், உட்பட பத்து
பொறுப்புகளை இவர்
ஏற்றுள்ளார்.

- க.ரவீந்திரன்



மறைவுக்குப் பின்பு... நானும் திவாகரும் நாதியற்றவர்கள். 'இந்த வீட்டில் இனி எது நடந்தாலும் யாரும் வந்து தட்டிக்கேட்கப் போவதில்லை' என்ற தைரியத்தில் பங்கஜமும் குணவதியும் சதித் திட்டம் தீட்டி விட்டார்கள் போலும்!

என்ன செய்யப் போகிறேன் நான்?

தம்பியை அழைத்துக் கொண்டு எங்காவது சென்று விடலாமா? எங்கு செல்ல முடியும்? யார் அடைக்கலம் தருவார்கள்?

தம்பி திவாகர் பாவம்! சின்னப் பையன்... அவன் எப்படி சமாளிக்க முடியும்?

அநீதி தலை விரித்தாடும் இந்த உலகில்... இளமையும் அழகும் கொண்ட வயதுப் பெண்ணுக்கு என்னை பாதுகாப்பு இருக்கும்?

இதற்கு பயந்து கொண்டு... இதே வீட்டில் தொடர்ந்து நான் இருக்கவும் முடியாதே?

பெரிய ஆபத்து காத்திருக்கிறதே?

## கவிதை

### தண்ணீருக்காக

குழாயடியில்
மனைவி
மதுக்கடையில்
கணவன்!

- போளூர் சி.ரகுபதி

பணபலம், அதிகார பலம், செல்வாக்கு... ஆகியவற்றைக் காட்டி குணவதியை வெகு சுலபமாய் மயக்கிவிட்டாள் பங்கஜம்.

யாருமற்ற அனாதைப் பெண்ணைத் தள்ளி விட்டு லாபம் பார்க்க ஆசைப்பட்டுவிட்டாள் குணவதி மாமி!

இவர்களை எதிர்த்துப் போராடி நான் நிச்சயம் ஜெயிக்கவே முடியாதே?

குணவதி மாமி என்னை என்னவென்று நினைத்துவிட்டாள்?

கார், பங்களா, ஏகப்பட்ட திரண்ட சொத்து இருந்தால் போதுமா? இதற்கு ஆசைப்பட்டு வீரேந்திரனைப் போன்ற பொறுக்கிக்கு நான் கழுத்தை நீட்டி விடுவேன் என்று நினைத்தாளோ?

பங்கஜமும் வீரேந்திரனும் கொலை செய்வதற்குக் கூட அஞ்சாதவர்கள் ஆயிற்றே?

இவர்களிடமிருந்து நான் எப்படி தப்பிக்கப் போகிறேன்? ஐயோ! பகவானே! இந்த இக்கட்டிலிருந்து எப்படியாவது என்னைக் காப்பாத்தி, கரையேற்றி விடுங்களேன்...

ஆஞ்சநேயா! எம்பெருமானே! கடைக்கண் திறந்து பாரய்யா' கண்ணீர் மல்க இஷ்ட தெய்வத்தை மனமுருக வேண்டியபடி... சப்பாத்தி மாவில் வெந்நீரும், பாலும் எண்ணெயும் ஊற்றிப் பிசைந்தாள் வானதி.

"ஏய் வானதி! கூடத்துல தூணோரமா ஒரு பெரிய கூடை இருக்கு பார்த்தியா?" அதட்டினாள் குணவதி.

"நான் சரியா கவனிக்கலை மாமி! அந்தம்மா போனதும் நேரா அடுக்களைக்கு வந்துட்டேன்..."

"பங்கஜம் அந்தக்கூடை நிறைய பழங்கள், ஹார்லிக்ஸ் பாட்டில், பிரெட் பாக்கெட்ஸ்... எல்லாம் வாங்கிட்டு வந்தாங்க...

உனக்காக நிறைய மல்லிகைப் பூவும் கொண்டு வந்தாங்க... உங்க மாமாவைப் பத்தி விசாரிக்க வந்தாங்க... வெறும் கையோட வரக்கூடாதுன்னு தாராளமா கூடை நிறைய வாங்கிட்டு

வந்திருக்காங்க...

பூவை எடுத்துத் தலையில வச்சுக்கோ..."

"மாமா! மாமாவோட நிலைமையை நெனச்சு மனசுக்குள்ளே ரொம்ப கவலையா இருக்கு... பூவை வச்சுக்கிற மனநிலையில நான் இல்ல...

வாங்கிட்டு வந்த பூ வேஸ்ட்டாகக் கூடாது. சாமி படங்களுக்கு அந்தப் பூவை சாத்திடறேன் மாமி"

மெல்லிய குரலில் பேசினாள் வானதி.

"பைத்தியம் மாதிரி உளறாதே! அந்தம்மா உனக்காக ஆசையா வாங்கிட்டு வந்திருக்காங்க... அதை எடுத்து ஃப்ரிஜ்ஜிலேயாவது வை... நாளைக்கு எடுத்து வச்சுப்பே...

வீரேந்திரன் உன்னைப் பார்க்க வருவார்னு சொன்னாங்கல்ல? நீ படிச்சவ... இன்னுமா உனக்குப் புரியலே?

அவங்களுக்கு இருக்கிற வசதிக்கு... எல்லாரும் நான் நீன்னு போட்டி போட்டுக்கிட்டு பொண்ணைக் குடுப்பாங்க...

ஆனா அவங்க உன்னைப் பெண் கேட்டு வந்தாங்க... இது உன் அதிர்ஷ்டம் வானதி!

நமக்கும் அவங்களுக்கும் ஏணி வச்சாக்கூட எட்டாது. இது உனக்கே தெரியும்னு நெனக்கிறேன்..."

"பணம் காசுக்கு நா என்னிக்கும் ஆசைப்படறவ இல்ல மாமி! அந்த வீரேந்திரனைப் பத்தி எனக்கு நல்ல அபிப்பராயம் கிடையாது மாமி! ஒரு தாய் ஸ்தானத்துல இருந்து எங்களை வளர்த்து ஆளாக்கினீங்க...

தயவு செய்து என்னைப் புரிஞ்சுக்கோங்க மாமி! நான் மேலே படிக்கணும்னு ஆசைப்படறேன்.

வேலைக்குப்போய் சம்பாதிச்சுட்டே மேலே படிச்சுக்கிறேன் மாமி!

இப்போதைக்கு எனக்குக் கல்யாணம் வேண்டாம் மாமி"

கெஞ்சும் தொனியில் பேசிவிட்டுப் பரிதாபமாய் பார்த்தாள் வானதி.

"எதிர்த்துப் பேசும் தைரியம் உனக்கு எப்ப வந்துச்சு...? என்னை நீ தாயா மதிக்கிறேல்ல...

தொடர்ச்சி 34-ம் பக்கம்

31-ம் பக்கத் தொடர்ச்சி

நான் உனக்கு கெடுதல் நெனைப்பேனா? பொண்ணுங்களுக்கு காலாகாலத்துல கல்யாணம் நடந்துடணும்..

"வேலைக்குப் போய் காலத்துக்கும் உழைச்சு சம்பாதிக்கணும்னு உனக்கு தலையெழுத்தா? அதிர்ஷ்டம் உன்னோட கதவைத் தட்டும்போது அதைப் பயன்படுத்திக்க வேண்டாமா?

வீரேந்திரனுக்கு என்ன குறைச்சல்? பார்க்க திடகாத்திரமா பீமசேனன் மாதிரி இருக்கான். உட்கார்ந்து தின்னாலும் பத்து தலைமுறைக்கும் குறையாத சொத்து இருக்கு.

நீ பணம் காசுக்கு ஆசைப்படாதவளா இருக்கலாம். ஆனா... அந்தப் பணம் இல்லாம இந்த பூமியிலே நாம்ப வாழவே முடியாது. தெரிஞ்சுக்கோ...

மேலே படிக்கணும்னு ஆசையிருந்தா... கல்யாணத்துக்கு அப்புறமாவும் நீ படிக்கலாமே? அந்த வீட்டுக்கு நீ வாழப் போனா... ஒரு மகாராணி மாதிரி வளைய வரலாம்.

உன் ஆசைக்கு யாரும் அங்கே முட்டுக்கட்டை போட மாட்டாங்க வானதி"

அவள் பதில் பேச வாயெடுப்பதற்குள்... வீட்டு வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

வாசலில் எட்டிப் பார்த்த திவாகர்... நாலே எட்டில் அடுக்களைக்கு வந்தான்.

இருண்ட முகத்துடன் "அந்த வீரேந்திரன் வந்திருக்காரு" என்றான். வானதிக்கு உள்ளுக்குள் உதறலெடுத்தது.

## 6

'தலைக்கு மேல் வெள்ளம் போனால்... சாண் என்ன? முழம் என்ன?'

வீரேந்திரன் வீடு தேடி வந்துவிட்டானே? மாமாவைப் பார்த்து பரிதாபப் பார்வையை வீசி விட்டு... கூடத்துத் தூணைப் பற்றிக் கொண்டு நடுங்கிப் போய் நின்றிருந்தவளின் அருகே நெருங்கி வந்தானே?

இவள் வெலவெலத்துப் பார்க்கையில்... "என்ன வானதி?

கவலைப்படாதே.. நானிருக்கேன் உனக்கு! எப்ப வேணும்னாலும் எனக்கு ஃபோன் பண்ணு!

எல்லாத்தையும் எடுத்துச் செய்யக் காத்திருக்கேன். உனக்காக நான் எதையும் செய்வேன். சரியா? நான் வரட்டுமா?" என்று வெகு உரிமையாய் கொஞ்சலாய் பேசிவிட்டுச் சென்றானே?

குணவதிக்கு மகிழ்ச்சியில் தலை கால் புரியவில்லை.

"பெரிய இடத்துப் பிள்ளை மாதிரியா இருக்காரு? எவ்ளோ அன்பா உரிமையா பேசறாரு?

நீ எதைப் பத்தியும் விசனப்படாதே வானதி! வீரேந்திரன் உன்னை தங்கத் தாம்பாளத்துல வச்சு ஏந்தத்தான் போறாரு...

நான் பெத்த பொண்ணாயிருந்து.. அவளுக்கொரு நல்ல வாழ்க்கை அமைஞ்சா எப்படி சந்தோஷப்படுவனோ? அதே சந்தோஷம் தான்... இப்ப என் மனசு பூராவும் இருக்கு வானதி"

மாமி குணவதி பேசப் பேச.. வானதிக்கு செவிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போலிருந்தது.

இரவெல்லாம் வேதனையிலும் திகிலிலும் தூங்காமல் கொட்டக் கொட்ட விழித்திருந்தாள்.

காலையில் தலை பாறாங்கல்லாய் கனத்து விண் விண் என்று வலித்துத் தொலைத்தது.

மாமாவுக்காகத் தயாரித்த ஜவ்வரிசிக் கஞ்சியையே அரை டம்ளர் பருகிவிட்டு நடமாடினாள்.

வாய்விட்டு, ஓவென்று கதற வேண்டும் போலிருந்தது. மனதில் கவலை

**டிப்ஸ்**

**இரவில் குடைபிடிப்பவர்கள்**

**மேற்கத்தியத் தீவுகளில் கிரெனடாஷின் பூர்வ குடிகள் நிலவின் ஒளி தங்கள் உடல் மேல் விழ அனுமதிப்பதில்லை. நிலவு ஒளி வீசும் இரவுகளில் உடலில் நிலவொளி விழாமல் குடைபிடித்துக் கொண்டுதான் நடமாடுகிறார்கள்.**

**பரிசுத்தம்**

**காட்டு யானை பிற உயிர்களைச் சாகடித்து விட்டால் நீரில் குளித்த பின்பே உணவு அருந்துமாம்.**

**- ஆரணி தமிழ்ச்செல்வம்**

முற்றுகையிட்டிருந்ததால்... நாக்கு ஏகத்திற்கும் கசந்து விட்டிருந்தது.

மதியம்கூட எதையும் சாப்பிடப் பிடிக்கலை. தம்பி சாப்பிட்டு முடித்ததும் பாத்திரங்களை ஒழித்துப் போட்டு தேய்த்துக் கழுவிக் கவிழ்த்துவிட்டு ஈரக் கைகளைத் துடைத்தபடியே கூடத்திற்கு வந்தாள்.

வீட்டைப் பெருக்கி முடித்த தருணத்தில்... குணவதி சிறு எண்ணெய் வாளியுடன் வெளியில் கிளம்பத் தயாராகிவிட்டிருந்தாள்.

"மூணு மணியாச்சு வானதி! நான் கோவிலுக்குக் கிளம்பறேன். பங்கஜத்தை அழைச்சுட்டுத்தான் போவேன்.

ராகு காலம் முடியற மட்டும் நாங்க கோவில்லே தான் இருப்போம். கோவிலுக்குப் போகணும். துணைக்கு வர்றியா?'ன்னு நேத்தே அவங்க கேட்டிருந்தாங்க... அதான்..." தயங்கி நிறுத்தினாள்.

"நீங்க போயிட்டு வாங்க மாமி. நான் பார்த்துக்கிறேன்" அவள் சென்றதும்.. கையை மடித்து தலைக்கடியில் வைத்து சோர்ந்து போய், கூடத்துத் தூணோரம் ஒருக்களித்துப் படுத்தாள் வானதி.

ஐந்து நிமிடங்கள் கரைந்திருக்கும். யாரோ தோளைத் தொட்டு

பியாரிட்ஸ் தென் மேற்கு பிரான்சிலுள்ள சுற்றுலா நகரமாகும். ஆண்டு முழுவதும் இதமான தட்பவெட்ப நிலையும் கடற்கரைகளும், பெரிய அலைகளும் அழகான சுற்றுலா விடுதிகளும் இந்த நகரின் சிறப்பு.

- க.ரவீந்திரன்



அசைத்ததும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

தம்பி திவாகர்!

"அக்கா! சீக்கிரம் வா... மாமா உன்கிட்ட பேசணுமாம்"

வாரி சுருட்டிக் கொண்டு எழுந்தாள் வானதி.

மாமாவின் முகத்தில் ஒரு பரபரப்பும் தெளிவும் ஏற்பட்டிருந்தன.

பலத்தைத் திரட்டிக் கொண்டு சிரமப்பட்டு பேச ஆரம்பித்தார்.

"வானதி! நீ இந்த வீட்டை விட்டுக் கிளம்ப வேண்டிய நேரம் வந்தாச்சுடா... முக்கியமா தேவைப்பட்டதை எடுத்துக்கிட்டு தயாரா இரு"

"எ.. என்ன மாமா சொல்றீங்க? நான் எங்கே போவேன்? எனக்கு யாரைத் தெரியும்?... உங்களை இந்த நிலைமையில விட்டுட்டு... நான் எப்படிப் போக முடியும்?" விழிகளில் மளுக் என்று வெப்ப நீரூற்று ஜனித்தது.

"திவாவோட செல் மூலமா... என் நண்பன் சபேசன் கிட்ட எல்லாத்தையும் சொல்லியிருக்கேன். உனக்கு சேர வேண்டிய உங்கம்மாவோட நகைகள்...

உங்கப்பா விட்டுப்போன ரொக்கப் பணம்... எல்லாமே அவன்கிட்டே பாதுகாப்பா இருக்கு.

பணத்தை எப்.டி.யில அவன் மூலமாத்தான்போட்டு வச்சிருக்கேன். குணவதி அந்தப் பணத்தை வச்சுத்தான் உங்களை வளர்த்துப் படிக்க வைக்கிறேன்'னு நெனச்சுட்டு இருக்கா...

நான் சல்லிப் பைசா அதுலே தொட்டதில்லை. நீங்க என் குழந்தைங்க... சபேசன் என் பால்ய சிநேகிதன் மட்டுமில்ல... உத்தமன்!

தன் ஒரே பொண்ணை சமீபத்துல பறிகொடுத்துட்டு தவிச்சுட்டு இருக்கான். நாளன்னிக்கு அவனோட பேத்திக்குப் பிறந்தநாள்... சென்னைக்கு தன் மனைவியோட பயணப்படறான்.

அவன்கூட நீயும் கிளம்பிடு. உன்னையும் திவாவையும் இனிமே சபேசன் பார்த்துப்பான்கிற நம்பிக்கை எனக்கிருக்கு.

சீக்கிரம் ரெடியாகு... சபேசன் கார்லே வந்துட்டு இருக்கான்."

“மாமா! இந்த நிலைமையில உங்களை விட்டுட்டு நான் எப்படி மாமா போக முடியும்?” தேம்பினாள் வானதி.

“அக்கா! குணவதி மாமியை மாமா கூப்பிட்டு கண்டிச்சுப் பார்த்தாரு... ஒரு பிரயோஜனமும் இல்ல...

அந்தப் பொறுக்கி வீரேந்திரன் வீட்டுக்கே வந்துட்டானே? அவன் பணபலமும் ஆள் பலமும் கொண்டவன் அவனை எதிர்த்துப் போராட முடியாதுங்கிறதால... மாமா இந்த முடிவுக்கு வந்திருக்காரு... மாமாவை நான் கவனிச்சுக்கிறேன். இப்போ உன்னைக் காப்பாத்த வேண்டியதுதான் ரொம்ப முக்கியம்.

அந்த வீரேந்திரன் உன்னை முழுங்கற மாதிரி பார்த்தான் தெரியுமா? விட்டா நாளைக்கே கட்டாயத் தாலி கட்டிடுவான்.

மாமா முடிவெடுத்தா அது சரியாத் தானிருக்கும். யோசிக்காம கிளம்பு அக்கா! நேரமாயிட்டிருக்குல்ல?” உரிமையாய் அதட்டினான் திவாகர்.

அதற்கு மேல் எதுவும் பேசத் தோன்றாமல்... புறங்கையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு... வேண்டியவற்றை எடுத்துக் கொண்டு நிமிர்ந்த வேளையில்.. வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. வானதிக்கு படபடப்பு கூடியது.

## 7

ஓங்கி உயரமாகப் பணக்காரத் தோரணையில் சாந்தம் தவழும் முகத்துடன் வந்தவரைப் பார்த்தவுடன் சட்டென்று கையெடுத்துக் கும்பிட்டாள் வானதி.

“வாங்க... வாங்க சார்! மாமா... இதோ இந்த அறையில் இருக்காரு...”

“மகாலிங்கம்!” மெல்லிய குரலில் முணுமுணுத்தபடி அவரது கையைப் பிடித்துக் கொண்டே சபேசன் கட்டிலில் மெல்ல அமர்ந்தார்.

அவரது கண்கள் ஏகத்திற்கும் கலங்கின. மாமாவின் விழிகளும் பனித்துவிட்டன.

“சபேசா! இந்த ரெண்டு பசங்களையும் இனிமே உன் பொறுப்புல விடறேன்.

இனி அவங்களுக்கு எல்லாமே நீ தான்... வானதிகிட்ட வாம்மா! சபேசனை சாருன்னு கூப்பிடாதே... அப்பான்னு கூப்பிடு" என்று இருமியபடி அவளது கையைப் பிடித்து சபேசனிடம் ஒப்படைத்தார்.

"மகாலிங்கம்! இனிமே இவங்க என் பொறுப்பு! நீ எதைப்பத்தியும் கவலைப்படாதே... இந்தப் பொண்ணுக்கு மேலே படிக்க இன்ட்ரஸ்ட் இருந்தா... படிக்க வைக்கிறேன்.

இவங்க ரெண்டுபேருடைய எதிர்காலத்தை நல்லபடியா அமைச்சுக் கொடுக்க வேண்டியது என் கடமை!

இப்பவாச்சும் என்கிட்ட மனசுவிட்டுப் பேசி உதவி கேட்கணும்னு உனக்குத் தோணுச்சே? என்னோட ஆத்ம நண்பனுக்காக இதைக்கூட செய்யமாட்டேனா? சரிப்பா... நேரா வீட்டுக்குப் போயிட்டு ராகு நேரம் முடிஞ்சதும் சரஸ்வதியையும் அழைச்சுட்டு... சென்னைக்கு கிளம்பறோம்.

நான் வரட்டுமா? தம்பி! மகாலிங்கத்தை கவனமா பார்த்துக்கோ... எதுவா இருந்தாலும் எனக்கு ஃபோன் பண்ணு! சரியா?"

சபேசா... தாமதிக்கிறது நல்லதில்லே... வானதி, உனக்கும் திவாவுக்கும் இனி ஒரு குறையும் வராது. எல்லாம் நல்லபடியா நடக்கும். பகவான் கண் திறந்து பார்த்தாச்சு. என்னைப் பத்திக் கவலைப்படாம... கிளம்புங்க..."

கலங்கும் விழிகளால் நண்பனை ஊன்றிப் பார்த்துவிட்டு சபேசன் அவசரமாய் வெளியேறினார்.

மாமாவின் பாதங்களைத் தொட்டுப் பணிந்துவிட்டு நீர் முட்டிய விழிகளோடு திவாகரைப் பார்த்து தலையசைத்து விட்டு... சிறுபேக்குடன் காரில் ஏறி அமர்ந்தாள் வானதி.

"என்னம்மா வானதி? மாமாவோட நெருங்கின நண்பர்னு சொன்னாரே? ஆனா.. ஒரு நாளும் இவரை நாம்ப பார்த்ததில்லையே?ன்னு யோசிக்கிறியா?

மகாலிங்கம், தன்னோட மனைவியின் குணம் சரியில்லைங்கிறதால... யாரையும் துணிஞ்சு வீட்டுக்கு வரவழைக்க மாட்டான்.

நான் உங்க வீட்டுக்கு வந்ததில்லையே தவிர... மகாலிங்கம் அடிக்கடி என்னைப் பார்க்க வந்துடுவான். வீட்டுக்கு இல்லேன்னா அலுவலகத்துக்கு என்னைத் தேடி வந்துடுவான்.

நண்பன்கிற பேருல என்கிட்ட ஆதாயத்தை மட்டும் எதிர்பார்த்து நிறைய பேர் என்னைச் சுத்தி வந்தாங்க... ஆனா என்கிட்டே எதையும் எதிர்பார்க்காம ஆத்மார்த்தமான அன்போடு... இத்தனை வருஷமா என்கிட்ட பிரியம் காட்டினது மகாலிங்கம் மட்டும்தான்!

என்னோட உண்மையான ஆத்ம நண்பன் அவன் மட்டும்தான்..."

"சபேசன் தனது மாமாவைப் பற்றிப் பேசப்பேச... நெக்குருகிப் போனாள் வானதி.

"மகாலிங்கம் மாமா எப்பேர்ப்பட்ட உத்தமர்? அவரைத் திரும்பவும் பார்க்கக்கூடிய பாக்கியம் எனக்குக் கிட்டுமா?

அவரைவிட்டுப் பிரியக்கூடிய சந்தர்ப்பம் வரும் என்று நினைத்துக்கூடப் பார்க்கவில்லையே?

தனது நண்பன் சபேசனிடம் எங்களை அடைக்கலமாக ஒப்படைக்கும் முன்பு... மாமாவின் மனம் என்ன பாடு பட்டிருக்கும்?

குணவதி மாமி கோவிலிலிருந்து திரும்பி வந்ததும்... என்னைக் காணவில்லையே? என்ற கோபத்தில் கத்திக் கூச்சலிடுவாளே?

விஷயத்தைக் கேள்விப்பட்டால் வீரேந்திரன் வெகுவாய் வெகுண்டு போய் விடுவானே?

ஆத்திரமும் ஏமாற்றமும் தாங்காமல் தம்பியை இழுத்துப்போட்டு அடித்து விட்டால்?

வீரேந்திரனுக்குப் பின்னால் தடிமாடுகளாய் பத்து ரவுடிகள் சதா அலைந்து கொண்டிருப்பார்களே?

அவர்களது கண்களில் இப்போது நான் பட்டு விட்டால்?

இந்தப் பெரியவரை அடித்துப்போட்டு விட்டு என்னை இழுத்துச் செல்லக்கூட... அவர்கள் தயங்கமாட்டார்களே?'

உள்ளூர பதட்டம் பந்தாய் மோதியலைந்தது. கார் அதற்குள் சபேசனின் பங்களாவை அடைந்தது.

தயக்கமும் தர்ம சங்கடமும் வானதியை ஆக்கிரமித்தன.

இத்தாலியின் பிரபல ஓவியர் ராஃபேல் தீட்டிய Head of a Muse என்ற இந்த ஓவியம் ஒரு காலத்தில் நெதர்லாந்து மன்னர் இரண்டாம் வில்லியம்ஸிற்கு சொந்தமாக இருந்தது. லண்டன் கிறிஸ்டி ஏல நிறுவனத்தில் ஏலத்திற்கு வந்துள்ள இது 16, மில்லியன் பவுண்டுகளுக்கு மேல் விலை போகும் என எதிர்பார்க்கப்படுகிறது

- க.ரவீந்திரன்



## 8

சென்னைக்கு வந்து சேர்ந்ததும் வானதிக்கு நிற்க நேரமில்லாமல் போய்விட்டது.

"வானதி! நீ எங்க மகள் மாதிரி... எதுக்கும் கூச்சப்படாம நீ சகஜமா வளைய வரணும். என் மனைவி சரஸ்வதியைப் பத்தியும், சம்பந்தியம்மா தையல்நாயகியைப் பத்தியும் நானே சொல்லப்படாது.

அவ்ளோ நல்ல டைப்! ரெண்டு பேத்தையும் உன்னைப் பெத்த தாயார் ஸ்தானத்துல நீ பார்க்கப்போறே" என்று சபேசன் தனது வீட்டுக்குள் நுழையும் முன்பே... ஆறுதலாய் கூறியிருந்தார்.

ராகுகாலம் முடிந்ததும் காரிலேறி பேத்தியின் பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக ஆவலாய் சென்னைக்கு வந்தவர்களுக்கு... அதிர்ச்சிதான் காத்திருந்தது.

குழந்தை பூஜா காய்ச்சலில் அனத்திக் கொண்டிருந்தாள்.

## கவிதை

### மேளம்

அப்பாவிற்கும்
அம்மாவிற்கும்
கேட்குமா?
பக்கத்துத் தெருவில்
கல்யாண மேளம்!

- போளூர் சி.ரகுபதி

டெஸ்ட் எடுத்துப்பார்த்ததில்... டைபாய்டு ஜுரம் என்று தெரிய வரவும்... தையல்நாயகி, சரஸ்வதி, சபேசன், சந்துரு என்று அனைவரும் பயத்தில் இடிந்து போய்விட்டிருந்தனர்.

"பொண்ணைத்தான் விபத்துல வாரிக்குடுத்தோம். காய்ச்சல்ல பேத்தியும் கண்ணை மூடிடுவா போலிருக்கே?" என்று கலங்கி கண்ணீர்விட ஆரம்பித்தனர் சபேசன், சரஸ்வதி தம்பதியினர்.

தையல் நாயகி ஏற்கனவே உடம்புக்கு முடியாதவள்...

மனைவியை இழந்துவிட்ட துயரத்திலிருந்து இன்னமும் மீண்டு வர முடியாமல் தவித்துக் கொண்டிருந்த சந்துரு... பூஜா தீவிர காய்ச்சலில் கண்களைக் கூடத் திறவாமல் வாடிக் கிடப்பதைப் பார்த்ததும்... விரக்தியிலும் கவலையிலும் மூழ்கி விட்டிருந்தான்.

'அனு எனக்கு இந்த உலகத்துல இருந்த ஒரே பிடிப்பே பூஜா தான்.. அவளுக்கு ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா.. நான் தாங்கமாட்டேன்.

மறுகணமே உன்கிட்ட வந்து சேர்ந்துடுவேன்' மனைவியின் படத்தைப் பார்த்து தனக்குள் புலம்பியபடி அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தான்.

வானதி அந்த வீட்டின் நிலைமையைச் சரிவரப் புரிந்து கொண்டாள்.

சதா குழந்தைக்கருகிலேயே இருந்து வேளா வேளைக்கு தவறாமல் மருந்து டானிக்கை ஊற்றிக் கண்ணும் கருத்துமாய் கவனித்துக் கொண்டாள்.

கண்களைக் கூடத் திறக்காமல் சதா 'அம்மா.. அம்மா' என்று அனத்திக்கொண்டிருந்தபூஜாவுக்கு... வானதியின் அரவணைப்பும் அருகாமையும் கிடைத்துவிடவே... காய்ச்சல் மெல்ல மட்டுப்பட ஆரம்பித்தது.

அன்று காலையில் டாக்டர் வந்து பரிசோதித்ததும் அனைவரும் கவலையாய் திரண்டு நின்றிருந்தனர்.

"இனி கவலைப்படத் தேவையில்லை... டெம்பரேச்சர் நல்லாவே குறைஞ்சிட்டது. மருந்து

டானிக்கை விடாம கண்டினியூ பண்ணுங்க..

குழந்தைக்கு கஞ்சி சாப்பிடப் பிடிக்கலைன்னா இட்லியைப் பால்லே பிசைஞ்சு ஊட்டுங்க... கவனமா பார்த்துக்கிட்டா... ஒண்ணும் பிரச்சினையில்ல. அப்போ நான் வரட்டுமா?"

டாக்டர் விடைபெற்றுச் சென்றதும்... குழந்தை பூஜா தன் அல்லி விழிகளை மலர்த்தி, தன் அருகில் அமர்ந்து நெற்றியை இதமாய் நீவி விட்டுக் கொண்டிருந்த வானதியை ஏறிட்டாள்.

சட்டென்று அவளது கழுத்தைக் கட்டிக் கொண்டு "மம்மி! எனக்கு உங்களை ரொம்பவே பிடிச்சிருக்கு. இனிமே நீங்க என்னை விட்டுப் போக மாட்டீங்கல்ல?" என்றதும்... வானதிக்கு திக்கென்றிருந்தது.

"டாடி! மம்மிகிட்ட நீங்க சொல்லுங்க டாடி! இனிமே அவங்க என்கிட்டேயே இருக்கணும்னு சொல்லிடுங்க...

அவங்க என்னை விட்டுட்டு மறுபடியும் போயிடக் கூடாது. அப்படிப் போயிட்டா... எனக்கு பெரிய ஜுரம் வந்துடும்.

ஏன் டாடி கம்முனு இருக்கீங்க? நீங்க பேசாம இருக்கிறதைப் பார்த்தா... மம்மி என்னை விட்டுட்டுப் போயிடுவாங்களோ?ன்னு பயமா இருக்கு டாடி!..."

குரல் தழுதழுத்துப் போய் மெல்ல அழ ஆரம்பித்தாள் பூஜா.

"இத்தனை நாள் கழிச்சு... இப்பத்தான் கண் முழிச்சு எங்க வயித்துல பாலை வார்த்திருக்கே பூஜா செல்லம்!

பயப்படாதே பட்டு! இந்த மம்மி உன்னை விட்டுட்டு எங்கேயும் போக மாட்டாங்க... என் பேச்சை மம்மி தட்டவே மாட்டாங்க... போதுமா? சமர்த்தா மருந்து டானிக்கை குடிச்சிட்டு கம்முனு தூங்குவியாம். சரியா?" தாத்தா சபேசன் ஆறுதலாய் பேசியதும் டக்கென்று அழுகையை நிறுத்தினாள் பூஜா.

"மாமா! என்ன மாமா இது?" மேற்கொண்டு சந்துரு பேசும் முன்... கையமர்த்தினார் சபேசன்.

சைகையிலேயே சந்துருவையும் வானதியையும் அந்த அறையைவிட்டு வெளியே வரும்படி அழைத்தார்.

ஹாலுக்கு வந்ததுமே எரிச்சல் தொனிக்கும் குரலில் பேச ஆரம்பித்தான்

கஜூராஹோவில் வாமனருக்கு ஒரு கோயில் உள்ளது. இக்கோயில் 63 அடி நீளமும் 42 அடி அகலமும் கொண்டது. வாமனர் உருவர் 4 அடி 3 அங்குல உயரத்தில் உள்ளது. கஜூராஹோ கோயில்களின் சிகரங்களும் மூடிய திருச்சுற்றுக்களும் குறிப்பிடத்தக்கவை. முகப்பில் சாய்ந்த இருப்பிடங்களும் மண்டபங்களும் சிறந்த சிற்பங்களும் கஜூராஹோ கோயில்களின் தனிச் சிறப்புகளாகும்.

- க.ரவீந்திரன்



சந்துரு.

"என்ன மாமா இது? இது உங்களுக்கே சரியாப் படுதா? பூஜாகிட்ட இப்படியொரு வாக்கை கொடுத்துட்டீங்களே மாமா?

இந்த வார்த்தையை நிஜம்னு நம்பிட்டா... பின்னாடி பிரச்சினை தானே மாமா? வேற எதையாவது சொல்லி சமாளிக்கிறதை விட்டுட்டு... இப்படியொரு நம்பிக்கையை அவ மனசுல நீங்க விதைக்கலாமா?

யோசிக்காம இப்படிப் பேசிட்டீங்களே மாமா?"

"பூஜாவோட நன்மைக்காகத் தான் நான் இப்படிப் பேச வேண்டியதா போச்சு. அவ இந்தக் காய்ச்சல்லே போய்ச் சேர்ந்துடுவாள்னு ரொம்ப பயந்து நடுங்கினோமே?

அதை மறந்துட்டீங்களா மாப்பிள்ளை?

குழந்தை அழுது மறுபடியும் காய்ச்சல் வந்துட்டா என்ன பண்றது? அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயத்தைப் பத்தி நாம்ப உட்கார்ந்து பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கு தெரியுமா மாப்பிள்ளை? முதல்ல நீங்க உட்காருங்க. வானதி, நீ என்னை

வாய்நிறைய அப்பான்னு கூப்பிடறே. நானும் உன்னை என் மகளாத்தான் நினைக்கிறேன்...

என் வார்த்தையை நீ தட்ட மாட்டேங்கிற நம்பிக்கையில்... நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கேன். நீயும் உட்காரும்மா...

நான் சொல்லப் போறதைக் கேட்டுட்டு நிதானமா யோசிச்சுட்டு.. நல்ல பதிலா சொல்லு"

பீடிகை போட்ட சபேசனை விழிகள் விரிய ஏறிட்டாள்.

அவளது இதயத்துடிப்பு எகிற ஆரம்பித்தது.

## 9

"மாப்பிள்ளை! நீங்க திறமைசாலி... உத்வேகமா உழைச்சு சாதனை புரிஞ்சுட்டிருக்கிற இளைஞர் நீங்க...

இந்தக் காலத்து இளைஞரா இருந்தும் எந்தக் கெட்டப் பழக்கத்துக்கும் அடிமையாகாம சொக்கத் தங்கமா வளைய வர்றீங்க... உங்க கூட வாழ்வாங்கு வாழ என் பொண்ணு அனுவுக்குத்தான் குடுத்து வைக்கல.

அவ ஃபோட்டோவை பூஜாவோட கண்ணுல படாம நீங்க பார்த்துக்கிட்டது ரொம்ப நல்லதா போயிடுச்சு.

தனக்கு அம்மா இல்லைங்கிற ஏக்கமும் கவலையும் பூஜாவை ரொம்பவே ஆட்டிப் படைச்சுட்டு இருக்கு.

ஏக்கமும் கவலையும் இருந்தா... நாளடைவில அது ஆரோக்கியத்துக்கே வேட்டு வச்சு... உயிரை உடம்புல இருந்து உருவி எடுத்துடும்..."

"மாமா! நீங்க பெரியவங்க... உங்க வாயிலிருந்து இப்படியொரு

**டிப்ஸ்**

கரப்பான் பூச்சி எப்போதும் சரியாக 16 முட்டைகளே இடுமாம்.

**பன்றியின் ரத்தம்**

பன்றியின் ரத்தம் மனித ரத்தத்தை ஒத்திருப்பதை அடுத்து பன்றியின் ரத்தத்தை மனிதனுக்கு மாற்று ரத்தமாகச் செலுத்தலாமா என மருத்துவ உலகம் எண்ணுகிறதாம்.

- ஆரணி தமிழ்ச்செல்வம்

அவச்சொல் வரவேணாம். இதைக் கேட்கும் போதே எனக்குக் குலை நடுங்குது"

"மாப்பிள்ளை! நான் யதார்த்தத்தைத் தானே சொல்றேன்? அப்படியொரு அபாய கட்டத்துல தானே பூஜா இருக்கா? உங்களுக்கு வாழ்க்கையில இருக்கிற ஒரே பிடிப்பு அவதானே? அவ நல்லாயிருக்கணும்னு நீங்க நினைச்சா... முதல்ல நான் சொல்றதுக்கு நீங்க மறுப்பு சொல்லாம சம்மதிக்கணும்...

வானதி தங்கமான பொண்ணு. நாம எல்லோரும் கவலையில இடிஞ்சு போயிருக்கிற நேரத்துல குழந்தையையும் இந்த வீட்டையும் அவதானே பார்த்துகிட்டா...

இவளோட அன்பும் அருகாமையும் கிடைச்சதாலதானே... சாவு முனைக்குப் போன பூஜா குட்டி திரும்பவும் கண்ணு முழிச்சுப் பார்த்திருக்கா... பூஜாவை நல்ல முறையில வளர்த்து ஆளாக்கணும்னா... நீங்க அவசியம் வானதியைக் கல்யாணம் பண்ணிக்கணும்.

நாம்ப எதையுமே சொல்லாம இருக்கும்போது... பூஜாவே இவளை தன் அம்மாவா உறுதியா நெனச்சுட்டா பார்த்தீங்களா?

உங்களுக்கு வேணும்னா... மனைவிங்கிற பந்தமே தேவைப்படாம இருக்கலாம். ஆனா பூஜா பெண்குழந்தை!

அவளுக்கு அவசியம் தாயோட அரவணைப்பும், அன்பும் தேவை மாப்பிள்ளை!

சகலத்தையும் யோசிச்சுப் பார்த்து சரின்னு... சொல்வீங்கன்னு நம்பறேன் மாப்பிள்ளை!

அம்மாடி... வானதி! அடைக்கலமா கூட்டிக்கிட்டு வந்துட்டு... தன்னோட மாப்பிள்ளைக்கு இரண்டாம் தாரமா கட்டி வச்சு... தன் பேத்திக்கு தாயாக்கிட்டாங்களே?'ன்னு... நெனக்காதேம்மா...

உலகத்துல வலை வீசித் தேடினாலும் இப்படியொரு தங்கமான மாப்பிள்ளை கிடைக்கிறது கஷ்டம் தெரியுமா?

ஆசை ஆசையா எம் பொண்ணு அனுவை கட்டி வச்சேன். அவ குடுத்து வைக்காதவள். நீயும் என் மகள் தான்.

நீ மாப்பிள்ளை கூட வாழ்வாங்கு வாழணும். நீ தாயில்லாம வளர்ந்தவ... அந்த ஏக்கம் என்னன்னு உனக்கு நல்லாவே தெரியுமில்லையா?

கஜுராஹோவில்
(மத்தியப்பிரதேசம்
கி.மு.11.12) லக்ஷ்மணன்
கோயிலில் மங்கை
ஒருவர் தன் காலில்
குத்திய முள்ளை
எடுக்கும் காட்சியை
சித்தரிக்கும் சிற்பம்.
- க.ரவீந்திரன்



தாயன்புக்காக தவிக்கிற அந்தப் பிஞ்சுக் குழந்தை... உன்னைப் பார்த்து தான் பிழைச்சு எழுந்திருக்கு....

கடைசி வரை அவளை உன் மகளா நீதான் பார்த்துக்கணும். உன்னை என்கிட்ட ஒப்படைச்சதும் மகாலிங்கத்துக்கு... மனசிலிருந்த பெரிய கவலை இறங்கிடுச்சு போல...

இனி அவன் பிழைக்க மாட்டான்'னு கையை விரிச்ச டாக்டரே ஆச்சரியப்படும் வகையில ஒரு அதிசயம் நிகழ்ந்திடுச்சாம்...

அவனோட ஆரோக்கியத்துல அபிவிருத்தி ஏற்பட்டு முன்னை விட ரொம்பத் தெளிவா இருக்கானாம்...

'அபாய கட்டத்தைத் தாண்டிட்டாரு மாமா... பிழைச்சுப்பாரு'ன்னு திவாகர் தான் போன்லே சொன்னான். மகாலிங்கத்துக்கிட்ட ஃபோனைக் குடுக்கச் சொன்னேன்.

அவன்கிட்ட நலம் விசாரிச்சு பேசின கையோட... என் அடிமனசுல இருக்கிற எண்ணத்தையும் ஜாடைமாடையா பேசிப் பார்த்தேன்.

துணுக்கு

உலக சாதனை

கனடா நாட்டைச் சேர்ந்த ஸ்காக்கில் லேன் என்பவர், 8 மணி நேரத்தில் 25, 289 பேருடன் கைகுலுக்கி உலக சாதனை படைத்துள்ளார்.

- ஆரணி தமிழ்ச்செல்வம்

'டேய் மடையா! இதை மனசுல வச்சிக்கிட்டுத்தானே வானதியை உன்கிட்ட ஒப்படைச்சேன். எனக்கு இதிலே பரிபூரண சம்மதம்...

உன்மேல நம்பிக்கை இருக்கு சபேசா!'ன்னு... மகாலிங்கம் ஒப்புதல் தெரிவிச்சுட்டான்.

அந்த தைரியத்துல தான் உன்கிட்ட இப்படிப் பேசறேன். உனக்கு இதிலே இஷ்டமில்லைன்னா... வெளிப்படையா சொல்லிடு வானதி!

உடனடியா உன் பதிலை நீ சொல்லிட்டா நல்லது வானதி!"

வானதியின் விழிகளில் நீர்த் திரையிட்டது. சட்டென்று எழுந்து நின்றாள். உணர்ச்சி வசத்தில் அவளது மெல்லிய இதழ்கள் நடுங்கின.

## 10

"எ... என்னை மன்னிச்சுடு வானதி! உன் மனதை நான் காயப்படுத்திட்டேன்னு நெனக்கிறேன். எந்தப் பெண்ணுக்கும் ரெண்டாம் தாரமா வாழ்கைப் படறதுக்கு..." சபேசன் பேசி முடிப்பதற்குள் வானதி குறுக்கிட்டாள்.

"அப்பா! அவசரப்படாதீங்க... நீங்க எந்த விதத்திலேயும் என்னைக் காயப்படுத்தலை...

எனக்கு நினைவு தெரிஞ்ச நாள்லே இருந்து மகாலிங்கம் மாமாவோட முகத்தைப் பார்த்தே வளர்ந்தவள்.

எனக்கும் என் தம்பிக்கும் அவர் ஒரு தெய்வம் மாதிரி! ஒரு தாயுமானவரா இருந்து எங்களை ஆளாக்கின கடவுள்...

எப்போ அவரே உங்ககிட்டே இதுக்கு சம்மதம் தெரிவிச்சுட்டாரோ... இனி அதுக்குமேல நான் யோசிக்கிறதுக்கு எதுவுமே இல்ல...

எனக்கு அவரோட சொல்தான் வேத வாக்கு! எனக்குன்னு தனிப்பட்ட அபிப்பிராயம் எதுவும் கிடையாது. பெரியவங்க நீங்க எந்த முடிவு எடுத்தாலும்... எனக்கு சம்மதம் தான்!

எனக்கு நேரமாச்சு! பூஜாவுக்கு டானிக் தரணும். சத்து மாவுக் கஞ்சி தயாரிக்கணும்..."

நறுக்கு தெறித்தாற் போல் பேசி... தன் சம்மதத்தைத் தெரிவித்து விட்டு... அடுக்களைக்குள் அடைக்கலமானாள் வானதி.

"அப்பாடா! எனக்குப் பாதிப் பாரம் இறங்கிட்ட மாதிரி இருக்கு... மாப்பிள்ளை! மறுத்து எதுவும் பேசிடாதீங்க...

வேற வழியே இல்ல... பூஜாவைக் காப்பாத்தணும்னா.. நீங்க சம்மதிச்சுத்தான் ஆகணும்..."

"மாமா! என் மனசு பூரா அனுதான் வியாபிச்சிருக்கா... இது உங்களுக்கே நல்லாத் தெரியுமே?

நான் எப்படி மாமா இன்னொரு பெண்ணை மனைவியா ஏத்துக்க முடியும்?" தடுமாறினான் சந்துரு.

"என்ன மாப்பிள்ளை இது? அனுவைப் பெத்தவன் நான்! நானே எவ்வளவு திடமா இந்த முடிவை எடுத்திருக்கேன்.

எல்லாத்துக்கும் மனசுதான் காரணம் மாப்பிள்ளை? 'மனமிருந்தால் மார்க்கம் உண்டு'ன்னு... பெரியவங்க சும்மாவா சொல்லி வச்சாங்க?

அனு தான் வானதி! வானதி தான் அனு'ன்னு நெனச்சுக்க வேண்டியதுதான்... நான் அந்த மாதிரி தானே மனசைத் தேத்திக்கிட்டேன்?

பூஜா குட்டியோட வருங்காலத்தை மட்டும் நெனச்சுப் பாருங்க... நான் சொல்றது நூறு சதவீதம் சரின்னு உங்களுக்கே புரியும்..."

**டிப்ஸ்**

**முதல் ரயில் பயணம்**

**27-9-1825** அன்று ஜார்ஜ் ஸ்டீபன்சன் கண்டுபிடித்த லோகோ மோஷின் என்ற அந்த முதலாம் நீராவி என்ஜின் ரயில் இங்கிலாந்தில் உள்ள டார்லிங் ஸ்டேஷனிலிருந்து 32 கிலோ மீட்டர் பயணம் செய்து ஸ்டாக்டனைப் போய்ச் சேர்ந்ததாம்.

- ஆரணி தமிழ்செல்வம்

"இதைவிட்டா வேற வழி இல்லைங்கிறதை தெளிவா எடுத்துச் சொல்லிட்டீங்க மாமா! நீங்க ஒரு முடிவெடுத்தா அது சரியாத் தானிருக்கும்.

உங்க பேச்சுக்கு நான் கட்டுப்படறேன் மாமா! எனக்கு கொஞ்சம் டைம் கொடுங்க... என் மனசு இன்னும் ஒரு தெளிவுக்கு வரலை... வந்ததும்... ஐ மீன் வந்த பிறகு கல்யாணத்தை வச்சுக்கலாமே மாமா!" தயங்கி நிறுத்தினான் சந்துரு.

"தாராளமா.. டைம் எடுத்துக்கோங்க.. நீங்க இந்த மட்டும் இறங்கி வந்ததே பெரிய விஷயமில்லையா? அப்பாடா! முழு பாரமும் இறங்கிடுச்சு!

மாப்பிள்ளை! இன்னொரு சமாச்சாரம்... நாம்ப எல்லோரும் வர்ற வாரத்துல ஒரு டூர் போயிட்டு வரலாமா? மைண்டுக்கு நல்ல ரிலாக்ஸேஷன் கிடைக்கும்...

கேரளா எல்லைப் பகுதியில 'அட்டப்பட்டி'ங்கிற மலைக்கிராமம் இருக்காம்... ரொம்ப எழிலான பிரதேசமாம்... போய் சுத்திப் பாத்துட்டு அஞ்சாறு நாள் தங்கிட்டு வந்தா...மனசுக்கு தெம்பா இருக்குமே மாப்பிள்ளை?

தங்கறதுக்கு கெஸ்ட் ஹவுஸ் வசதி கூட இருக்குன்னு... ஒரு பயணக் கட்டுரையில போட்டிருந்தாங்க... என்ன சொல்றீங்க மாப்பிள்ளை?"

ஆர்வமாய் விழிகள் பளபளக்க சபேசன் கேட்டபோது சந்துருவுக்கு மறுக்க மனம் வரவில்லை.

"போகலாமே! ஆனா... பூஜா இப்பத்தான் காய்ச்சல்லே இருந்து மீண்டிருக்கா... மலைக்காத்து அவளுக்கு ஒத்துக்குமா?'ன்னு... யோசனையா இருக்கு."

"அட... நீங்க வேற மாப்பிள்ளை! இனி பூஜா குட்டிக்கு ஒண்ணும் வராது.

**டிப்ஸ்**

**தீவுகள்**

அந்தமான் 205 தீவுகளும் நிக்கோபார் 19 தீவுகளும் கொண்டவை.

***

**பச்சையாக**

எஸ்கிமோ என்ற சொல்லுக்கு உணவைப் பச்சையாக உண்பவர்கள் என்று பொருளாம்.

- ஆரணி தமிழ்ச்செல்வம்

அதான் வானதி அவகிட்டேயே இருக்காள்லே...

அங்கே போனதுமே பூஜா குட்டி... மலைத்தோட்டங்கள்லே சும்மா வண்டு சுத்தற மாதிரி சுத்தி வரப்போறா... அவளை சமாளிக்கிறதுக்கு நாம்ப தான் திண்டாடப் போறோம். பார்த்துக்கிட்டே இருங்க"

"சரிங்க மாமா! நாம்ப அங்கே போகலாம். அதுக்கான ஏற்பாடுகளை நான் கவனிக்கிறேன்" என்றபடி எழுந்து சென்றான் சந்துரு.

அந்த அழகான மலைப்பிரதேசத்தில்... மிகப் பெரிய அதிர்ச்சி அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தது.

## 11

அட்டப்பட்டி! கேரளாவுக்கு உரிய பசுமையோடு ஜில்லென்று கண்களுக்கு விருந்தளித்தது.

கெஸ்ட் ஹவுஸில் வந்து தங்கி இரண்டு நாட்கள் பறந்ததே தெரியவில்லை.

ஸ்வெட்டர் அணிந்து மப்ளரைக் கட்டிக் கொண்டு வாக்கிங் கிளம்பி விட்டிருந்தார் சபேசன்.

முந்தின நாள் வெகுநேரம் சுற்றிப் பார்த்த களைப்பில் மற்றவர்கள் கெஸ்ட் ஹவுஸில் முடங்கிவிட...

இவர் மட்டும் இன்றைக்கு தனியே கிளம்பி விட்டிருந்தார்.

மலைப் பாதையில் காலாற நடந்தவர்... அந்தத் திருப்பதில் புளிமரத்துக்குப் பக்கத்திலிருந்த டீக்கடையை யதேச்சையாகப் பார்த்தார்.

டீக்கடை வாசலில் நீள நீளமாய் இரண்டு பெஞ்சுகள்...

கவிதை

**என் காதல்!**

மாலை மயங்கும்
வேளையில்
உள்ளங்கால் நிழலாய்
ஒவ்வொருவருக்குள்ளும்
ஒரு காதல்
'கரு'க் கொண்டிருக்கும்!
சிலது சுகப்பிரசவம்!
சிலது சிசேரியன்!
சிலது இறந்தே பிறக்கும்...
என் காதல் போல!

***

**அம்மா முகம்**

கெட்டுப்போன சாதம்
சாக்கடையில்
கொட்டிவிட மனமில்லை...
கஷ்டப்பட்டு சமைக்கும்
அம்மா முகம் நினைவில்!

- போளூர் சி.ரகுபதி

இட்லி சுட்டு விற்றுக் கொண்டிருந்த இளம்பெண்ணை கண்டபடி ஒருவன் ஏசிக் கொண்டிருந்தான்.

"மடையை ஆத்தினோமா? இட்லி சுட்டோமா பிள்ளைங்களை வளர்த்தோமோ?ன்னு இருக்கணும்.

கண்டபடி கண்ணை மேயவிட்டு... என்னை விட்டுட்டு இன்னொருத்தன்கூட ஓடிப்போகலாமா? அப்படின்னு நீ நெனச்சா... கண்ட துண்டமா வெட்டிப்போட்டிருவேன்.

உன்னோட முதல் புருஷன் மாதிரி நானும் ஏமாந்த சோணகிரியா இருப்பேன்'னு நெனச்சுடாதே... நீ எங்க ஓடினாலும் தேடி வந்து வெட்டுவேண்டி... ஓடு காலி நாயே!

அழகா பொறந்துட்டோம்னு திமிருடி உனக்கு... இந்த அழகுதானே... உன் புருஷனை உதறிட்டு என் கூட ஓடி வர... உனக்கு தைரியம் கொடுத்துச்சு...

திமிருடி! கீழே போயி பலசரக்கு வாங்கிட்டு வர்றேன். அது வரைக்கும் ஒழுங்கா கடையைப் பாத்துட்டு இரு... என்னடி முறைக்கிறே?" அவளது கூந்தலைப் பிடித்து 'பளார்' 'பளார்' என்று அறைந்து விட்டு... சைக்கிளில் ஏறிச் சென்று விட்டான்.

கண் எதிரே நடந்த கொடுமை... சபேசனின் மனதைப் பிசையத் தொடங்கியது.

'யாரிந்த பெண்? கண்ணாடி கூட இன்று அணிந்து வரவில்லையே? அருகில் நெருங்கிப் பார்க்க வேண்டியதுதான்...

கண்டபடி அடிபட்டும் கண்களைக் கசக்கியபடி இட்லி சுடுகிறாளே? தமிழகத்தைச் சேர்ந்த பொண்ணோ?' பலதும் எண்ணியபடி அந்தக் கடையை நெருங்கினார் சபேசன்.

"இந்தாம்மா! மாட்டை அடிக்கிற மாதிரி அடிச்சுட்டுப் போறானே? பாவம்... உனக்கு எந்த ஊரு?" அவரது குரலைக் கேட்டு நிமிர்ந்தவளைக் கண்டதும்... சபேசனுக்கு காலடியில் தரை நகர்ந்து செல்வது போலிருந்தது.

"அ... அனு... நீயா? உருக்குலைஞ்சு போனதால அடையாளம் தெரியல"

"அ... அப்பா! அப்பா... நீங்களா? நான் தப்பு பண்ணிட்டேன்பா... அந்தக் கல்யாணத்துக்குப் போனப்ப இந்த கிரியைப் பார்த்தேன் அப்பா! இவன் என் காலேஜ் மேட்... படிக்கிற காலத்துல லவ் லெட்டரை

நீட்டினான்... கிட்ட வந்து உருக உருகப் பேசுவான்...

நான் மயங்கலை... கல்யாணமாகி அத்தனை வருஷத்துக்கு அப்புறம் கவுரி கல்யாணத்துக்காகத் தென்காசிக்கு வந்தப்போ... 'உன்னையே நெனச்சு உருகி, மருகிட்டிருக்கேன். உன்னை நெனச்சு நிறைய கவிதை எழுதியிருக்கேன்'னு நெக்குருகப் பேசினாரு.

புத்தி கெட்டுப் போயிட்டேன்பா... மனசைச் சிதற விட்டுட்டேன். அன்னிக்கு நான் அந்த ட்ரெயின்லே ஏறலை... என்னோட டிக்கெட்டை வேறொரு பொண்ணுக்கு வித்துட்டு கிரிகூட ஓடி வந்துட்டேன்.

உங்களுக்கும் சந்துருவுக்கும் துரோகம்பண்ணிட்டு ஓடி வந்த நான்... சுகப்படலைப்பா... கிரி ஒரு மிருகம்! சந்தேகப்பட்டு குடிச்சுட்டு தினமும் அடிச்சு சித்திரவதை பண்றாருப்பா...

என்... என்னை மன்னிச்சுடுங்கப்பா" காலில் விழுந்து கதறினாள் அனு.

"சீ! சந்துருவுக்கு இப்படியொரு துரோகம் பண்ண உனக்கு எப்படி மனசு வந்துச்சு? பச்சைக் குழந்தையைக் கதறடிச்சுட்டு உன் சுகத்தைப் பெரிசா மதிச்சு குடும்ப மானத்தைக் காத்துல பறக்கவிட்டியே? பாவி!

ஊரு உலகத்தைப் பொறுத்தவரை... நீ செத்தவள் தான்! நீ உண்மையாவே செத்துத் தொலைஞ்சிருக்கக் கூடாதா? இப்ப மட்டும் என்ன?

நீ செத்தவள் தான்! கடவுள் உனக்கு சரியான தண்டனையைத் தான் தந்திருக்காரு.. சந்துரு எப்பேர்ப்பட்ட உத்தமரு? அவருக்கு



இப்படியொரு அவமானத்தையா தந்திருக்கே?

அவரு தன்னோட மனசுல உனக்கொரு கோவில் கட்டி வச்சிருக்காரு... ஆனா நீ சாக்கடையில விழுந்துகிடக்கியே? உன்னை மாதிரி பெண்களுக்கு இதான் தண்டனை!

செத்தவ... செத்தவளாவே இரு! நான் இதைக் கெட்ட கனவா நெனச்சு மறந்துடுவேன். இப்ப போயி உடனே தலை முழுகிடறேன். மாப்பிள்ளைகிட்ட எதையும் நான் மூச்சுவிடப் போறதில்ல... சீ சண்டாளி! என் காலை விடு" அவளை உதறித் தள்ளி விட்டு நடந்தார் சபேசன்.

மாமனாரைத் தேடிக் கொண்டு பின் தொடர்ந்து வந்து நின்ற சந்துரு... அத்தனையையும் கேட்டு விட்டான்.

சட்டென்று தன்னை புன்னை மரத்தின் பின்னால் மறைத்துக் கொண்டான்.

'அனு! சீ... நீயும் ஒரு பெண்ணா? உன்னை நெனச்சா நான் அணு அணுவா உருகினேன்? இத்தனை வருஷங்களா என்கூட வாழ்ந்துட்டு எனக்கும் பூஜாவுக்கும் துரோகம் பண்ண எப்படி மனசு வந்துச்சு? மனசிலே அன்பிருந்தால்... நீ குடும்பத்தை விட்டுட்டு ஓடியிருப்பியா?

தூ... உன் அஸ்தியை நான் கங்கையில கரைச்சப்போ கங்கையோட கங்கையா நீ சங்கமமாயிட்டே'ன்னு கதறினேன். ஆனா நீ சாக்கடையில விழுந்து கிடக்கிறியே? மாமா சொன்ன மாதிரி... நீ செத்தவளாவே இரு... எங்க குடும்பத்துக்கு நீ ஏற்படுத்தின களங்கம்... வெளியில தெரிய வேணாம் ... பூஜாவோட ஃப்யூச்சர் வீணாயிடும்.

நான் எதையும் பார்க்கலை... கேட்கலை... உனக்காக நான் அழுது உருகி கண்ணீர் வடிச்சது போதும்! நானும் மனசளவில உன்னைத் தலை முழுகிட்டேன்...'

தனக்குள் பேசிக் கொண்ட சந்துரு விடு விடென்று கெஸ்ட் ஹவுஸை நோக்கி நடந்தான்.

## 12

கெஸ்ட் ஹவுஸுக்கு பக்கவாட்டிலிருந்த சரிவில் பூத்திருந்த காட்டு ரோஜாவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த வானதி, காலடியோசையைக் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினாள்.

திரும்பின வேகத்தில் சரிவில் சரிந்து விழப் பார்த்த வானதியை



'அகம் புறம்' படத்தில் ஷ்யாம், மீனாட்சி

சட்டென்று தாங்கிப் பிடித்தான் சந்துரு.

"கீழே விழுந்திருந்தா என்னத்துக்கு ஆகறது? நான் பதறிட்டேன் வானதி... ஐ லவ் யூ ஸோ மச்! 'பூஜாவுக்காக மட்டுமில்ல... எனக்கும் நீ வேணும். என்னைக் கட்டிக்க உனக்கு சம்மதமா வானதி? நிஜத்தைச் சொல்லு"

"நீங்க கிடைக்க நான் குடுத்து வச்சிருக்கணுமே? பூஜாவை மட்டுமில்ல... உங்களையும்... ஐ லவ் யூ ஸோ மச்"

செக்கர் வானமாய் முகம் சிவந்தவளை ஆசையாய் அணைத்துக் கொண்ட சந்துரு "வா! சென்னைக்குப் போனதும் உடனடியா கல்யாணத்தை வச்சு'க்கலாம்னு மாமாகிட்ட சொல்லிடலாம்" என்றான்.

(முற்றும்)